பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணைநூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

தாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 4 185 புதன்கிழமை ஓசை 89

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணைநூலகம்.

## ஆக்கிவாயுமூலம் இயந்திர இயக்கம் செயற்பாட்டை பார்வையிட வசதி

பெற்றோலிய எரிபொருள் சக்திக்கு மாற்றீடாக ஆக்கிவாயு மூலம் இயந்திரங்கள் இயக்கும் செயற்பாட்டை மக்கள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்- இவ் வாயு மூலம் நீரிறைக்கும் இயந்திரங்கள் இயக்கிக் காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- இம் மாதம் 16ம் திகதியிலிருந்து ஒவ்வொரு வாரமும் திங்கள், வெள்ளி ஆகிய கிழமைகளில் பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் புதன் கிழமைகளில் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் ஞாயிற்றுக் கிழமைகளில் முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 2மணி (6ஆம்பக்கம் பார்க்க)

## சிறிலங்கா பாராளுமன்றத்தில்

# ஐ. தே. க. தேசியபட்டியலில் தெரிவான எம். பிகளை பதவி விலக டி. பி. வற்புறுத்து

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்; நியமிக்க டி. வி. திட்டம்?

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமிப்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதி டி, பி. விஜேதுங்க தீர்மானித்துள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது மிக அண்மையில் இந்த அமைச்சர் நியமிக்கப்படவுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் இச் செய்தி முற்றிலும் ஆதாரமற்றது எனசிறிலங்கா. பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது அச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என தெரிவிக்கப்பட்டதாம்.

## தட்டுப்பாட்டு யுகத்திற்கு செல்ல மக்கள் அச்சம்

### தேர்தலில் வெற்றி எமக்கே என்கிறார் டி.பி.

(கொழும்பு)

தட்டுப்பாட்டு யுகம், 'கியூ' யுகம் என்பவற்றுக்குச் செல்ல மக்கள் பயப்படுகிறார்கள்- எனவே அடுத்த தேர்தலில் நாமே வெற்றியடைவோம்- இதில் எதுவித சந்தேகமும் இல்லை என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தெரிவித்துள்ளார்-

அவுஸ்ரேலிய வர்த்தகர் சங்கத்துடன் நடைபெற்ற கலந்[illegible] லங்கா மக்கள் துன்பம் சூழ்ந்த ஒரு யுகத்தில் வாழ முன்வரமாட்டார்கள் என்றார்-

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை ஏனைய கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைக்கு எதுவிதத்திலும் குறைந்ததல்ல- இப் பொருளாதாரக் கொள்கையே தொடர்ந்து கொண்டு செல்லப்படும்- இது குறித்து எவரும் அச்சம் கொள்ளத்

## பிரேமா ஆதரவாளருடன் வாக்குவாதம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வலியுறுத்தியுள்ளார் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்திற்கு ஆறு தேசியப் பட்டியல் பா. உ களை வரவழைத்த டி. பி. விஜேதுங்க தமக்கு புதிதாக நான்கு பேரை பாராளுமன்றத்திற்கு நியமிக்க வேண்டிய அவசியம் உள்ளதாகவும் எனவே பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் அதற்கு வழிவிடுமாறும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார் என தெரியவருகிறது இந் நால்வரில் பிரேமதாசா குடும்பத்தைச் சேர்ந்த எவரும் அடங்காததையடுத்து பிரேமதாசா ஆதரவாளர்களுக்கும் ஜனாதிபதி விஜேதுங்கவிற்கும் இடையே சூடான வாக்குவாதம் ஏற்பட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த நால்வரதும் நியமனம் கட்சிக்கும் நாட்டிற்கும் மிக முக்கியமானது எனவே நீங்கள் உங்கள் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும் என ஜனாதிபதி டி பி விஜேதுங்கா தேசியபட்டியல் பா உ களை கேட்டுக்கொண்டதாக தெரியவருகிறது

ஜனாதிபதி மாளிகைக்கு தேசிய பட்டியல் உறுப்பினர்களான காலிங்க ஒபேவன்ச, எலைக் றோபசன், எம் எச் அமீட், ஆர் ஏ டி சிறிசேன, றேஜினோல் பெரேரா, ரூபா சிறியானி டெனில் ஆகிய ஆறு உறுப்பினர்களையும் மாலை ஆறு மணிக்கு அழைத்து விரிவான நீண்டநேரம் தனித் தனியாகவும் ஒன்றாகவும் பல சுற்று பேச்சுகளை நடத்தியதாகவும் அதில் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டதாகவும் பி பி ஸி செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உபாலியின் ஆயுதங்கள் திடீர் மர்ம மறைவு

(கொழும்பு)

சொத்தி உபாலி கைது செய்யப்பட்ட போது அவரிடம் இருந்ததாகக் கூறப்படும் கூரிய ஆயுதங்கள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் மற்றும் தனது பாவனைக்கு என வைத்திருந்த பஜீரோ வாகனம் என்பன திடீரென மறைந்துவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் ''லங்கா தீப'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளன.

இவ்வாறு திடீர் என மறைந்த பொருள்கள் எங்கு சென்றுள்ளன என்பது தொடர்பாக தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதுவரை இது தொடர்பாக எந்த தடயமும் கிடைக்க வில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ் பல்கலைக்கழகத்தின்

## பரீட்சை முடிவுகள் தாமதம் திங்கள் முதல் பகிஷ்கரிப்பு?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு பரீட்சை முடிவுகள் தாமதமாவது குறித்து நேற்று கைலாசபதி கலை அரங்கில் கூடிய மாணவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பரீட்சை முடிவுகள் வெளிவராவிடின் திங்கட்கிழமை முதல் வகுப்புகளை பகிஷ்கரிப்பது என்பது குறித்து பரிசீலித்திருப்பதாக தெரியவருகிறது

இது தொடர்பாக மாணவர்கள் அனைவரதும் அபிப்பிராயங்களைப் பெறுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது மிக அண்மையில் இந்த அமைச்சர் நியமிக்கப்படவுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது அச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என தெரிவிக்கப்பட்டதாம்.

## தட்டுப்பாட்டு யுகத்திற்கு செல்ல மக்கள் அச்சம்

### தேர்தலில் வெற்றி தமக்கே என்கிறார் டி.பி.

(கொழும்பு)

தட்டுப்பாட்டு யுகம், 'கியூ' யுகம் என்பவற்றுக்குச் செல்ல மக்கள் பயப்படுகிறார்கள்- எனவே அடுத்த தேர்தலில் நாமே வெற்றியடைவோம்- இதில் எதுவித சந்தேகமும் இல்லை என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தெரிவித்துள்ளார்-

அவுஸ்ரேலிய வர்த்தகர் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்த அவர் சிறிலங்கா மக்கள் துன்பம் சூழ்ந்த ஒரு யுகத்தில் வாழ முன்வரமாட்டார்கள் என்றார்-

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை ஏனைய கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைக்கு எதுவிதத்திலும் குறைந்ததல்ல- இப் பொருளாதாரக் கொள்கையே தொடர்ந்து கொண்டு செல்லப்படும்- இது குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என மேலும் அவர் கூறினார்-

ஐக்கிய தேசியக் கட்சியின்

## பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் வாக்குவாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு நேற்று முன்தினம் சிறி கொத்தாவில் நடைபெற்றதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மிக நீண்ட நேரமாக நடைபெற்ற இம் மாநாட்டில் பல உறுப்பினர்களிடையே பலத்த வாக்குவாதம் நடைபெற்றதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைதியாகக் காணப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## குற்றச்செயலுக்கு எதிராக உறுதியாக செயற்படுக

### பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

குற்றச் செயல்கள் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுப்படியும், பொலிசாரின் விசாரணைகளின் போது செல்வாக்கு மிக்கவர்களின் குறுக்கீடுகளுக்கு இடமளிக்க வேண்டாமெனவும் பொலிஸ்மா அதிபர் பிரான் டி சில்வா பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

அவர் பொலிஸ் திணைக்கள அதிகாரிகளுக்கு விடுத்துள்ள ஒரு அறிவுறுத்தலில் மேலும் ஊழல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குண்டர் குழுக்களுடன் தொடர்பு கொண்டுள்ள பொலிசார் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யுறுத்தியுள்ளார் நேற்று காலை ஜனாதிபதி செயலகத்திற்கு ஆறு தேசியப் பட்டியல் பா. உ. களை வரவழைத்த டி. பி. விஜேதுங்க தமக்கு புதிதாக நான்கு பேரை பாராளுமன்றத்திற்கு நியமிக்க வேண்டிய அவசியம் உள்ளதாகவும் எனவே பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் அதற்கு வழிவிடுமாறும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார் என தெரியவருகிறது இந் நால்வரில் பிரேமதாசா குடும்பத்தைச் சேர்ந்த எவரும் அடங்காததையடுத்து பிரேமதாசா ஆதரவாளர்களுக்கும் ஜனாதிபதி விஜேதுங்கவிற்கும் இடையே சூடான வாக்குவாதம் ஏற்பட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த நால்வரதும் நியமனம் கட்சிக்கும் நாட்டிற்கும் மிக முக்கியமானது எனவே நீங்கள் உங்கள் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும் என ஜனாதிபதி டி பி விஜேதுங்கா தேசியபட்டியல் பா உ களை கேட்டுக்கொண்டதாக தெரியவருகிறது

ஜனாதிபதி மாளிகைக்கு தேசிய பட்டியல் உறுப்பினர்களான காலிங்க ஒபேவன்ச, எலைக் றோபசன், எம் எச் அமீட், ஆர் ஏ டி சிறிசேன, றேஜினோல் பெரேரா, ரூபா சிறியானி டெனில் ஆகிய ஆறு உறுப்பினர்களையும் மாலை ஆறு மணிக்கு அழைத்து விரிவான நீண்டநேரம் தனித்தனியாகவும் ஒன்றாகவும் பல சுற்று பேச்சுகளை நடத்தியதாகவும் அதில் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டதாகவும் பி பி ஸி செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. கவிலை விட்டுபிரிந்தவர்களை இணைத்துக் கோள்வதே முக்கியபணி

### கட்சி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சியை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ள வேண்டும் இது தான் இன்று நாம் கட்சிக்கு செய்ய வேண்டியது ஆகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர தெரிவித்தார்-

கண்டி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எமது கட்சியின் ஒரு கிளை; அது மீண்டும் எம்முடன் இணைக்கப்படும்- தற்போது காமினி திசநாயக்கா, டாக்டர் சரத் அமுக ஆகியோர் எம்முடன் உள்ளனர்- இவர்கள் எமக்கு சுமையல்ல ஒரு சக்தி என்றார்-

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்று நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது எனக்கு நித்திரை கூட வருவதில்லை என மேலும் அவர் தெரிவித்தார்-

## தேசியப்பட்டியல் உறுப்பினர் அமீட் நேற்று பதவி விலகினார்

### காமினி நாளை பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம்- எச்- அமீட் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்று ராஜினாமாச் செய்தார்.

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்வதற்கு வசதியளிக்கும் பொருட்டே அவர் தமது பதவியை ராஜினாமா செய்ததாக தெரிவிக்கப்படுகிறது

நேற்று மாலை 6, 00 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் வைத்து அவர் தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி டி பி: விஜேதுங்காவிடம் கையளித்தார்.

இப் பதவி விலகல் கடிதம் கையளிக்கப்பட்டபோது ஐ. தே. க. தலைவர் டாக்டர் எம் சீ. எம்- கலீல் பொதுச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கிகள், வெடிகுண்டுகள் மற்றும் தனது பாவனைக்கு என வைத்திருந்த பஜீரோ வாகனம் என்பன திடீரென மறைந்துவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் ''லங்கா தீப'' பாக தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதுவரை இது தொடர்பாக எந்த தடயமும் கிடைக்க வில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின்

## பரீட்சை முடிவுகள் தாமதம் திங்கள் முதல் பகிஷ்கரிப்பு?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு பரீட்சை முடிவுகள் தாமதமாவது குறித்து நேற்று கைலாசபதி கலை அரங்கில் கூடிய மாணவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பரீட்சை முடிவுகள் வெளிவராவிடின் திங்கட்கிழமை முதல் வகுப்புகளை பகிஷ்கரிப்பது என்பது குறித்து பரிசீலித்திருப்பதாக தெரியவருகிறது

இது தொடர்பாக மாணவர்கள் அனைவரதும் அபிப்பிராயங்களைப் பெறுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## பல்கலை.பிரச்சினைகுறித்து கொழும்பில் பேச்சுக்கள்

(கொழும்பு)

யாழ். பல்கலைக் கழகம் தற்போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து இப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்- பல்கலைக் கழகத்துக்கான பல்வேறு அடிப்படைத் தேவைகள் குறித்தும், பல்கலை மாணவர்களின் அனுமதி குறித்தும், மற்றும் பல்கலைக் கழகத்துக்குத் தேவையான எரிபொருள், காகிதாதிகள் ஆகியவற்றை கப்பல் மூலம் எடுத்து வருவதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய பல் வேறு விடயங்கள் குறித்தும், பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன-

மேலும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளையும் துணைவேந்தர் குணரட்ணம் சந்தித்து பேசியதாகவும் யாழ்- பல்கலைக் கழகத்தில் பற்றாக் குறை நிலவும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் குறித்தும் துணைவேந்தர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன- (க)

## இராணுவம் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

(தென்மராட்சி)

இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் காட்டினுள் விறகு வெட்டச் சென்றவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். (86)

## கடற்படை கலிபர் தாக்குதலுக்கு இரண்டு பெண்மணிகள் காயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை, தொண்டமனாறு ஆகிய இடங்களில் கடற்படையினரின் கலிபர் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பெண்மணிகள் காயமடைந்தனர்-

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் வைத்து மேற்கொண்ட கலிபர் தாக்குதலுக்கு ஆதிகோவிலடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான அருந்தவராசா ரதி (வயது 28 என்ற இளம் குடும்பப் பெண் மார்பில் படுகாயமடைந்தார்-

தொண்டமனாறு கடற் பகுதியில் வைத்து நடாத்தப்பட்ட மற்றொரு கலிபர் தாக்குதலுக்கு அதே இடத்தைச் சேர்ந்த இராசலிங்கம் லீலாவதி (வயது 44) என்பவர் கையில் காயமடைந்தார்.

வல்வெட்டித்துறை தொண்டமனாறு பகுதிகளில் நேற்று காலை 5 40 மணியளவில் நடந்த இச் சம்பவங்களின் போது மேற்படி இரண்டு பெண்களும் தமது கடமைகளில் ஈடுபட்டிருந்த போதே காயமடைய நேரிட்டது- இவர்கள் இருவரும் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்- கடற்படையினர் இப் பகுதியில் அகோரத் தாக்குதலை மேற்கொண்டனர்- (யோ)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கூரேயின் வீடுபொலிசாரால்சோதனை பாதுகாவலரின் ஆயுதங்களும் பறிப்பு

### உபாலியை ஜனாதிபதிக்கும் தெரியும் என்கிறார் கூரே

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரேயின் சொந்த வீடொன்று பொலிசாரால் சோதனையிடப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையின்போது காவலில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரின் ஆயுதங்கள் பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பொலிசாரின் இந் நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் விசனம் தெரிவித்த சிறிசேன கூரே மேலும் கூறுகையில், பல ஆண்டுகளாக கட்சிக்காகவும், அரசுக்காகவும் விசுவாசமாக உழைத்து வந்த தமது வீடு சோதனையிடப்பட்டது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், சொத்தி உபாலி குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுவது வேறு ஆனால் தம்முடன் தொடர்புபடுத்துவது வேறு என்றும், சொத்தி உபாலியை ஜனாதிபதி விஜேதுங்காவிற்கும் நன்கு தெரியும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பொது நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் ...

## வரி விளம்பரம்


**உடன் தேவை**

8 அடி நீளமும் 10 அடிக்குள்ளும் கடைச்சல் பட்டடை (லேத்) அல்லது மினி லேத் விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் தொடர்பு துரை மோட்டார் உயிருட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம் (சி-9431)

**பாம் போஷா**

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமான சத்துணவு பாம்போஷா பஅ சபையின் சற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது. (சி-9332)

**விற்பனைக்கு**

நல்லின இரண்டு மாத சேவல் குஞ்சுகளும் (விறாத்து நிலக்குரியவை) பேட்டுக் குஞ்சுகளும், இறைச்சிக்கோழிகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மேஜர் பிரசாப் செட்டி பண்ணை இராஜ வீதி, கோப்பாய் (சி 9439)


## சுகவாழ்வு வெளியீடு

''யுனிசெவ்'' உதவியுடன் மாநகராட்சிமன்ற நகரப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வெளியிடப்படவுள்ள 'சுகவாழ்வு' சஞ்சிகையின்வெளியீட்டுவைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2.45 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர்தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பேராசிரியர் வி கே கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு த. பூ. முருகையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். சஞ்சிகைக்கான மதிப்புரை யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறைசிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசாவால் வழங்கப்படவுள்ளது.

வெளியீட்டு வைபவத்தைத் தொடர்ந்து ஆயுதப் போராட்ட சூழ்நிலையில் சிறுவர்களுக்கு உதவுதல் எனும் 'யுனிசெவ்' கைநூலைத் தழுவி பலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியை திருப்தியாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், நடக அரங்கக் கல்லூ

# திருடியவருக்கு தண்டனை மேல் நீதிமன்று ஊர்ஜிதம்

[தென்மராட்சி]

கிளாலியைச் சேர்ந்த ஒருநபருக்குச் சொந்தமான ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான நகையினை அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருடியதாக வழக்காளி எதிராளிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

இம்மாவட்ட நீதிமன்று விசாரணையின் பின்னர் இவ் எதிராளியைக் குற்றவாளி எனக்கண்டு 15,000 ரூபாவை அபராதமாக கட்டும்படியும் 3மாதம் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது

இத் தீர்ப்பினை எதிராளி குறிப்பிட்ட அபராத தொகையினை ஏற்றுக்கொண்டு 3 மாதச் சிறைத் தண்டனைக்கு எதிராக மேல் முறையீடு செய்தர் இதன் பிரகாரம் மேல்முறையீட்டு நீதிமன்றம் எதிராளியினுடையமேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு மேல்முறையீட்டுமன்று மாவட்ட நீதிமன்று வழங்கிய தீர்ப்பையே இறுதியாக வழங்கியது தீர்ப்பினை உயர் நீதிமன்ற நீதியாளர்களான திருமதி சுபிர்தா டொமினிக், க. இளம்பிறை, மு சுகி என்பவரால் நன்கு ஆராய்ந்து இத் தீர்ப்பு வழங்கப்பட்டது (86)

## தமிழ்த்தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை; ஊர்காவற்றுறை கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான, கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் இம்மாதம் 30-ம், 31-ம் திகதி யூன் 1-ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் புங்குடுதீவு மகா வித்தியாலயம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம், சுண்டுக்குளி சென். ஜேம்ஸ் அக்கடமி ஆகிய இடங்களில் நடைபெறும என மேற்படி கோட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

## கண்டெடுப்பு


இரத்தினம் விக்னேஸ்வரராஜா என்பவரது அடையாள அட்டையும் தினக்குறிப்பேடும் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.


## முதலாண்டு நினைவு


கடந்த ஆண்டு கடமையின் போது காலமான தாதிகள் சங்கத்தலைவர் அமரர் ஆர். கே. ஜோசப் அவர்களின் முதலாம ஆண்டு நினைவாக நாளை காலை 11 மணிக்கு போதனாவைத்தியசாலையின் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுளளது.


## சுகாதார வார அனுஷ்டிப்பு

யாழ் வட்டு பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அண்மையில் அதிபர் திரு க நடராசா தலைமையில் சுகாதார வாரம் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பாடசாலை சுற்றாடல் பகுதிகள், அருகாமை வீதிகள் யாவும் மாணவர்களால் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட்டது.

இடம் பெயர்ந்து அகதிமுகாமில தங்கி இருக்கும் இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்து இளைஞர் மன்றச்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைமாணி, நாட்டியமாணி (Degree) பல்கலைக்கழக அனுமதி 1993/1994

மேற்படி பட்டப்படிப்புகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் என்னால் யூன் மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் பின்வரும் கற்கைநெறிகளில் கற்பித்தல் இடம்பெறும்.

01. கருநாடக இசை - வாய்ப்பாட்டு
02. கருநாடக இசை வாத்தியங்கள்:- வயலின் வீணை மிருதங்கம்
03. பண்ணிசை
04. பரதநாட்டியம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

01. க.பொ த உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்

## மாபெரும் கராத்தே போட்டியின் பெருவெற்றி குறித்து

# பாராட்டு

அங்கத்தவர் வங்கியான வட்டுக்கோட்டை அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்க ஊழியர்கள் தமது சக ஊழியரான நிதிப்பிரிவு உத்தியோகத்தர் * திரு. சி. ந. யோகரத்தினம் * யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் 15-5-94-இல் நடாத்தப்பட்ட கராத்தே போட்டியில் Academy of Oriental Martial Arts (Shotokan) கழகத்தின் சார்பில் 1-ம் இடங்களை உயர்தரமான BLACK BELT பிரிவில் பெற்றுக்கொண்டமைக்கு பாராட்டி வாழ்த்துகின்றனர்.

அத்துடன் இணைந்து 1-ம் இடத்தைப் பெற்று போட்டிக்கு மெருகூட்டிய சிரேஷ்ட உறுப்பினர் அ. மோகன் வின்சென்ற் அவர்களுக்கும், வழிநடாத்தி நெறிப்படுத்திய கழக மூத்த உறுப்பினரும் பொறுப்பாளருமான றேமண்ட் மாஸ்ரர் அவர்களுக்கும் எமது இனிய வாழ்த்துக்கள்.

(சி-9445) - ஊழியர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைக்கலைமணி/ நாட்டியக் கலைமணி/ டிப்ளோமா (Diploma) பயிற்சி நெறிகளுக்கான அனுமதி 1993/1994

மேற்குறித்த பயிற்சிநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் யூன் 30 ஆம் திகதிக்கு முன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள்:

1) விண்ணப்பதாரிகள் க.பொ த(உயர்தரம்) பரீட்சையில் ஒரேதடவையில் குறைந்தது மூன்று பாடங்களில கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள வட இலங்கைச் சங்கீத சபையினரால் ...ட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2) விண்ணப்பதாரி 30-06-1994 அன்று 15 வயதிற்கு மேற்பட்டவராகவும் 25 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

30 06-1994இல் மேல் குறிப்பிட்ட கல்வித் தகைமைகள்யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் யாழ் பல்கலைக் கழகத்தில் சிறாப்பரின் கருமபீடத்தில்ரூபா 20/-செலுத்தி அல்லது நிதியாளர். யாழ்பல்கலைக்கழகம்என்ற பெயருக்கு ரூபா20/-க்கான காசுக்கட்டளைஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் சொந்த முகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றினை அனுப்புவதன் மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பெறப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும் வேறு எவ்வித படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30-06-1994ஆகும்

## யாழ். பல்கலைக்கழக (வெளிவாரி) விரிவுரைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளான

- கலைமாணி (B. A.)
- வணிகமாணி (B. Com.)

பதிவு செய்த மாணவர்கள் மேற்படி விரிவுரைக்கு தோற்றலாம்.

விரிவுரைகள் 21 - 5 - 94-ல் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

(சி-9433)

## பல்கலைக்கழக விசேட அனுமதி-1992/93

யாழ். பல்கலைக்கழகத்திற்கு விசேட அனுமதியில் தெரிவான மாணவர்கள் உடனடியாகத் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவின்போது பின்வரும் ஆவணங்களையும் அவற்றின் நிழல் பிரதிகளையும் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. புகைப்படங்கள் (08)
2. பிறப்புச் சான்றிதழ்
3. பாடசாலை விடுகைப்பத்திரம்
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம்
5. தேசிய அடையாள அட்டை
6. பதிவுக் கட்டணம் ரூபா 175-00 (புவியியல் ஒரு பாடமாக எடுப்பவர்கள் மேலதிகமாக ரூபா 100 செலுத்தவேண்டும்.)

பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்.
10 - 05 - 1994

- பதிவாளர்

(சி-9446)


## நினைவு கூருகின்றோம்..

### 18.05.1994

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்- வல்வெட்டித்துறையில் முற்றுகையினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

செல்வம் (வேலுப்பிள்ளை அன்னலிங்கம் பகீரதன்-

லராக பேராசிரியர் வி கே கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு த. பூ. முருகையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். சஞ்சிகைக்கான மதிப்புரை யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறைசிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசாவால் வழங்கப்படவுள்ளது.

வெளியீட்டு வைபவத்தைத் தொடர்ந்து ஆயுதப் போராட்ட சூழ்நிலையில் சிறுவர்களுக்கு உதவுதல் எனும் 'யுனிசெவ்' கைநூலைத் தழுவி பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியை திருப்தியாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், நாடக அரங்கக் கல்லூரியின் ''கூடி விளையாடு பாப்பா'' எனும் சிறுவர் நாடகமும் இடம்பெறவுள்ளது.

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை;

தொழிலாளர்
கல்விச் சான்றிதழ்
நெறி
முதல்
அரையாண்டுப்
பரீட்சை - 1994

மேற்குறிப்பிட்ட பரீட்சை யூன்மாதம் 18ஆம், 20ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 31 - 05 - 1994க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

- பதிவாளர்

(சி 9449)

---

பல்கலைக்கழக அனுமதி
1993/1994

மேற்படி பட்டப்படிப்புகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் என்னால் யூன் மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பின்வரும் கற்கைநெறிகளில் கற்பித்தல் இடம்பெறும்.

01. கருநாடக இசை - வாய்ப்பாட்டு
02. கருநாடக இசை வாத்தியங்கள்:- வயலின், வீணை, மிருதங்கம்
03. பண்ணிசை
04. பரதநாட்டியம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

01. க.பொ.த உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180 புள்ளிகள் பெற்றிருக்தல் வேண்டும். 1991, 1992 க.பொ.த (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மூதவையினால் ஆற்றுகைக் கலையில் அங்கீகரிக்கப்பட்ட பிற தகைமைகளும் பரிசீலிக்கப்படும்

அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சையில் தகுதிபெறல் வேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் யாழ் பல்கலைக்கழகத்தில் நேரில் சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 20/- செலுத்தி அல்லது நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு ரூபா 20/க்கான காசுக்கட்டளை ஒன்றினைப்பெற்று அத்துடன் உங்கள் சொந்த முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றினை அனுப்புதல் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ் பல்கலைக்கழகத்தில் பெறப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். வேறு எவ்விதபடிவங்களும்ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30 - 06 - 1994 ஆகும்.

பதிவாளர்

(சி-9448)

---

நாளை காலை 11 மணிக்கு போதனாவைத்தியசாலையின் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

## சுகாதார வார அனுஷ்டிப்பு

யாழ் வட்டு பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அண்மையில் அதிபர் திரு க நடராசா தலைமையில் சுகாதார வாரம் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பாடசாலை சுற்றாடல் பகுதிகள், அருகாமை வீதிகள் யாவும் மாணவர்களால் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட்டது.

இடம் பெயர்ந்து அகதிமுகாமில தங்கி இருக்கும் இங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்து இளைஞர் மன்றச் செயலாளரும், ஆசிரியருமான திரு. ப. சிவலோகநாதன் சவர்க்காரங்களை அன்பளிப்பாக வழங்கினார். (24)

---

பயிற்சி நெறிகளுக்கான
அனுமதி 1993/1994

மேற்குறித்த பயிற்சிநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் யூன் 30 ஆம் திகதிக்கு முன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள்:**

1) விண்ணப்பதாரிகள் க.பொ த(உயர்தரம்) பரீட்சையில் ஒரேதடவையில் குறைந்தது மூன்று பாடங்களில கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க பொ.த.(உயர்தரம்) பரீ

கழகத்தில் சிறாப்பரின் கருமபீடத்தில்ரூபா 20/-செலுத்தி அல்லது நிதியாளர். யாழ்பல்கலைக்கழகம்என்ற பெயருக்கு ரூபா20/-க்கான காசுக்கட்டளைஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் சொந்த முகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றினை அனுப்புவதன் மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெறப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும் வேறு எவ்வித படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பங்கள்
அனுப்ப வேண்டிய
கடைசித் திகதி
30-06-1994ஆகும்

பதிவாளர்
(சி-9447)

---

# 1993 ஆம் ஆண்டுக்கான தொழிநுட்பக் கல்லூரி

# இறுதிப் பரீட்சைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகள் நேரே குறிக்கப்பட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை தொடங்கும் திகதிக்கு முதல் அலுவலக நாளில் சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரை தமது மாணவர் பிரவேச அனுமதிசீட்டுடன் தொடர்பு கொண்டு தமது நேரசூசி, பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| பயிற்சி நெறிகள் | பரீட்சை ஆரம்பமாகும் திகதிகள் |
|---|---|
| 1- உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு, 2-ம்வருடம் (H N.D A II) (பழைய / புதிய பாடத்திட்டம்) உயர் தேசிய வணிகவியல் தகுதித்தேர்வு, 2-ம்வருடம் (H N. D C II) ஆங்கில தேசிய தராதரப் பத்திரம் (N C. E,) கணக்கீட்டு தொழிநுட்பவியலளருக்கான தராதரப்பத்திரம் (N C A T.) | 23-05-1994 |
| 2. உயர் தேசிய கணக்கியல் தகுதித் தேர்வு, 3-ம்வருடம் (H. N D. A. III) (பழைய / புதிய பாடத்திட்டம்) தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப் பத்திரம் (குடிசார், பொறிமுறை, மின்னியல், கணிய அளவியல்) (N. C. T.) | 06-06-1994 |
| 3. உயர் தேசிய கணக்கியல் தகுதித்தேர்வு ,4ம் வருடம் (டி 118) H. N. D .A IV (பழைய பாடத்திட்டம்) ஆங்கில தேசிய தகுதித்தேர்வு (NDE) தேசிய கைப்பணி (தொழில்) தராதர பத்திரம் (Trade Courses) / படம்வரை பயிலுநர் தராதரப் பத்திரம் (D A) | 13-06-1994 |
| 4. வியாபாரக் கற்கைகளுக்கான தகுதித்தேர்வு (N D B.S) வியாபாரக் கற்கைகளுக்கான தேசிய தராதரப் பத்திரம் (N.C.B. S) உயர் தேசிய வணிகத் தகுதித்தேர்வு, 3ஆம் ,4ஆம் வருடங்கள் (HNDC III, IV) | 20-06-1994 |

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1994-05-17

(சி-9451)

---

6. பதிவுக் கட்டணம் ரூபா 175-00 (புவியியல் ஒரு பாடமாக எடுப்பவர்கள் மேலதிகமாக ரூபா 100 செலுத்தவேண்டும்.)

பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்.
10 - 05 - 1994

- பதிவாளர்

(சி-9446)

---

# நினைவு கூருகின்றோம்..

## 18.05.1994

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - வல்வெட்டித்துறையில் முற்றுகையினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**செல்வம்** (வேலுப்பிள்ளை அன்னலிங்கம் பகீரதன்- 5-ம் வட்டாரம், மண்டைதீவு யாழ்)

1986ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**ரஞ்சித்** (ஜெகநாதன் ஜெயராஜ்- சோசை,வங்காலை - மன்னார்)

இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அங்கின** (பிரபுதாஸ் பாக்கியநாதன்- வில்லியம் ரஞ்சித் - மிருசுவில் - யாழ்)

**ரகு** ( - வசீகரன் - சாவகச்சேரி - யாழ்)

**ஜோதிரவி** (அருமைத்துரை திருமானந்தம்-மட்டுவில் வடக்கு - சாவகச்சேரி)

யாழ் - வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**தேசிகன்** (சிவகாமி சிவகுமாரன் - புங்குடுதீவு-யாழ்)

1988ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**லெப். அருள்** (சபாரத்தினம் சத்தியராஜ் - மூதூர்- திருமலை)

திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

நிலாவெளிப் பிரதேசப் பொறுப்பாளர்,

**கப்டன் கிங்ஸ்லி** (வல்லிபுரம் சிவகுமார் - கலட்டி, கரவெட்டி மேற்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு புத்தூரில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 05 இளைஞர்கள் உட்பட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு யாழ் - வல்வெட்டித்துறையில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுரேஸ்** (பொன்னுச்சாமி கருணாகரன்- இன்பருட்டி, பருத்தித்துறை - யாழ்)

1992ஆம் ஆண்டு முல்லைத்தீவு - வற்றாப்பளை ஆலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் இளங்கோ வியஜராஜ்** (குழந்தைவேல் ஜெகதீஸ்வரன் - கொக்கிளாய் - மணலாறு)

1993ஆம் ஆண்டு அம்பாறை - விநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**செம்மணிச்செல்வன்** (குஞ்சலியப்போடி குணநாயகம் - விநாயகபுரம் - அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9444)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# ஜனாதிபதி சலுகை அறிவிப்பு 30 கோடி ரூபா நிதி அமைச்சு இழப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களை யொட்டி ஜனாதிபதி டி பி விஜேதுங்கா மேலும் சில சலுகை நிவாரணங்களை அறிவித்து வருகிறார் இவரின் உத்தரவிற்கமைய சீனி, கருவாடு, தகரமீன், துணிவகைகள் விலைகள் குறைக்க இவற்றின் மீதான இறக்குமதி தீர்வைகள் 30 சதவீதம்முதல் 50 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளன பலரின் கோரிக்கைகளையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்தது

தகரமீன், சீனி, கருவாடு மீதான இறக்குமதி தீர்வை 50சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது துணிவகைகள் மீதான தீர்வை 30சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அரசின் இந்நடவடிக்கையினால் அரசின் வருமானத்தில் 30 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது

## இ. தொ. கா. மீதான தடையுத்தரவு

# எழுத்துமூல தொகுப்புரை; நீதிமன்றம் பணிப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீதான தடை உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மீளாய்வு மனு மீதான வழக்கில் மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பினர் ஜூன் மாதம் ஆறாம் திகதியன்று எழுத்துமூலமான தொகுப்புரை வழங்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது

இ. தொ. கா. பொதுச் செயலாளரும், அமைச்சருமான எம். எஸ் செல்லச்சாமி உட்பட எட்டுப் பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி இ.தொ.கா. தேசிய சபை எடுத்த முடிவை அமுல்படுத்தக்கூடாது என்று கோரி மாவட்ட நீதிமன்றில் அமைச்சர் செல்லச்சாமி தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மாவட்ட நீதிமன்றம் முன்பு இடைக்கால தடை உத்தரவு விதித்திருந்தது தெரிந்ததே:

# தமிழ்த்திறன் போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை கல்விகோட்டத்தில் தமிழ் மொழித்திறன் கலைத்திறன் போட்டிகள் பாடசாலை மட்டத்திலான தெரிவுப் போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகிறது.

கோட்ட மட்ட போட்டிகள் இம்மாதம் 20, 22, 23, 24 ஆம் திகதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுமென கல்வி அதிகாரி திரு. வே தி செல்வரத்தினம் தெரிவித்தார்

(யோ)

# வாண்மை அபிவிருத்தி

(வடமராட்சி)

இலங்கை வங்கி நிர்வாக சேவை அலுவலர்களுக்கான வாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று இம்மாதம் 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை தேசிய கல்வி நிர்வாக பணிப்பாளர் சகல கல்விக் கோட்ட ரீதியாக கோரியுள்ளார்.

(யோ)

# 15 பில்லியன் பணநோட்டு புதிதாக பதிப்பிக்கப்படும்

## அதிகரிக்கும் செலவினத்தை சமாளிக்கவாம்

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்கா அறிவித்துள்ள புதிய சலுகை திட்டங்களையடுத்து மேலதிகமாக புதிதாக 15 பில்லியன் ரூபா பணநோட்டுக்களை பதிப்பிக்க அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்:

1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உயர்ந்தளவு பணத் தொகையாகஅப்போது10 பில்லியன் ரூபா பணநோட்டுக்களைபதிப்பித்தமையையும், 1989இல் மூன்று பில்லியன் ரூபா பணநோட்டு பதிப்பித்தமையையும் இந் நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேசமயம் அதிகரித்து வரும் செலவுகளையடுத்து பாரிய அரச கட்டடங்கள் நிர்மாணிப்பும், சில பகுதிகளைப் பொருளாதார வளமாக்கும் திட்டமும் கைவிடப்படவுள்ளதாக கொள்கை திட்டமிடல் இராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# 2000 பரல் தாரை பெற அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவையான தாரைப் பெற்றுக்கொள்ள யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துவருகின்றார்

இதன் முதற்கட்டமாக சுமார் 2000 பரல் தாரைப் பெற்றுக்கொள்ள யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை நாடியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இதன்படி அடுத்த தடவை கொழும்பு செல்லும்போது மேற்படி தாரைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலும் உள்ள வீதிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால் மிகவிரைவில் தாரைப் பெற்றுக் கொண்டாலே அவற்றை சீர்செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(பா), (ச)

# அகதிகளை திரும்ப அனுப்பும் சுவிஸ் அரசுக்கு ஆட்சேபம்

## கத்தோலிக்க தேவாலய கவுன்சில் அனுப்பியது

(கொழும்பு)

சிறிலங்கா - சுவிற்சலாந்து அரசுகள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கிணங்க இலங்கை அகதிகளுக்கு சுவிற்சலாந்து அரசு புகலிடம் அளிக்க மறுப்பதும், அவர்களை நாடுகடத்தும் நடவடிக்கையும் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். வட கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் இராணுவ நடவடிக்கை மனித உரிமை மீறல் செயல்கள் ஆகியவற்றிற்கிடையில் தாயகம் திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென சிறிலங்கா அரசு அளித்துள்ள வாக்குறுதி அர்த்தமற்றதாகும்: இவ்வாறு கொழும்பிலுள்ள சர்வதேச விவகாரங்களிற்கு பொறுப்பான கத்தோலிக்க தேவாலயங்களின் கவுன்சில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஐ. நா மனித உரிமை கவுன்சிலுக்கு அனுப்பி வைத்துள்ள அதன் வருடாந்த மாநாட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் இலங்கையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாமலிருக்கும் இனப்பிரச்சினை வட-கிழக்கு மக்களுக்கு எல்லையற்ற துன்பத்தையும் ஏழ்மையையும் ஏற்படுத்தியுள்ளது. நாடு அவசரகால சட்ட விதியின் கீழ் ஆளப்படுவதால் அரசியல் அமைப்பு வழங்கியுள்ள அடிப்படை பாதுகாப்பு மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது படையினரால் மக்கள் கொல்லப்படுவதும் காணாமற்போவதும் வடகிழக்கில் வான்தாக்கு மோட்டார் ஷெல் தாக்கு என்பன அடிக்கடி நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டது வடகிழக்கில் மின்சாரம், வீட்டு வசதி, மருத்துவ வசதியின்றி மக்கள் உள்ளனர்

இனப்பிரச்சினை இல்லை வடகிழக்கில் இருப்பது பயங்கரவாதம் இதை இராணுவ நடவடிக்கை மூலமாகவே தீர்க்கவேண்டுமென்ற அரசின் வாதம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பெரும் தடையாகவுள்ளது. இந்நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அரசியல் அமைப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை பாதுகாப்பு நிலை நிறுத்தப்படும் வரை இலங்கையில் சகஜநிலை நிலவுவதாக கருதுவது தவறாகும்.

தற்போதைய நிலையில் ஐரோப்பிய நாடுகளின் தவறான கருத்தின்படி சிறிலங்கா-சுவிஸ் அரசுகள் செய்துகொண்ட உடன்பாட்டின்படி இலங்கை அகதிகளுக்கு சுவிற்சலாந்து புகலிடம் அளிக்க மறுப்பதும் அவர்களை நாடுகடத்தும் நடவடிக்கையும் கண்டிக்கப்பட வேண்டிய செயல்களாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அவு. பிரஜையுரிமையினால் பதவியை இழந்தார்

(கொழும்பு)

வர்த்தக திணைக்களத்தை சேர்ந்த சிரேஷ்ட பெண் அதிகாரி ஒருவர் அவுஸ்திரேலியாவில் அந்நாட்டு பிரஜாவுரிமையை பெற்றதையடுத்து அவரை பணியிலிருந்துநீக்குமாறுஜனாதிபதி விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

இப்பெண் அதிகாரி அவுஸ்திரேலியாவில் முக்கியநகர் ஒன்றில் வர்த்தகதுறை கவுன்சிலராக நியமிக்கப்பட்டிருந்தார் இவர் அவுஸ்திரேலிய பிரஜாவுரிமையை பெற்றதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பிறநாட்டு பிரஜையை இராஜதந்திரியாக நியமிப்பதில்லை என்ற அவுஸ்திரேலிய கொள்கைப்படி அவர் சிறிலங்கா இராஜதந்திரி அந்தஸ்தை இழந்துள்ளார்.

# ஏ.ஆர்.வி மருந்துகள் றுகுணுவில் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு இம்முறை விசர்நாய்த் தடுப்பூசி மருந்து [வக்சீன்] கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

பருத்தித்துறையை வந்தடைந்த 'றுகுணு' கப்பலிலேயே இம்மருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

அத்துடன் இம்மருந்து யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களிற்கு ஊசி மூலம் ஏற்றப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(பா)

# உலகத் தமிழர் பண்பாட்டு மாநாடு ரொறன்ரோவில்

## மூன்று தினங்கள் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

கனடா ரொறன்ரோ நகரில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் உலகத் தமிழர் பண்பாட்டு கழகத்தின் ஆறாவது மாநாட்டில் அனேக தமிழறிஞர்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் ஆகிய நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றனர்.

ரொறன்ரோ யோர்க் பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் 19, 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது பல்கலைக்கழக உள்ளரங்குகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் வாசித்தல் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆக்கங்களுக்கானபரிசளிப்பும் இடம்பெறும் பல்கலைக்கழக வெளிமைதானத்தில் அமையவிருக்கும் வெவ்வேறு அரங்குகளில் கலைநிகழ்வுகள் இடம்பெறும்

மாநாட்டினையொட்டி பல்வேறு நாடுகளிலிருந்தும் புராதன தமிழ் ஏடுகள் நூல்கள் ஆகியவற்றை திரட்டி மறுபிரசுரம் செய்து நூலாக வெளியிட கனடாகிளை திட்டமிட்டுள்ளது. தமிழ் மக்களின் பண்பாட்டை கனடாவில் வாழும் ஏனைய இனத்தவர்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில் அலங்கார ஊர்திகளின் பவனியும் பரதநாட்டியம், கும்மி, நடனம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

# கப்பலில் மாநகரசபைக்கு 300 பரல் தார்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைக்கு றுகுணு கப்பலில் 300 பரல் தார் எடுத்துவரப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் தெரிவித்தார்.

இவற்றில் அரைப்பகுதி 'றுகுணு' கப்பலில் இருந்து இறக்கி யாழ் மாநகரசபைக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வீதிகள் புனரமைப்புப் பணி இம்மாத இறுதிப் பகுதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

(பா)

# தாதியர் போட்டிப் பரீட்சை வினாத்தாள் வந்துசேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

மாணவ தாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள் [illegible]

காரி ஒருவர் தம்முடன் எடுத்துவந்துள்ளார்.

# உயர்தர ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு

# சேலைன் மருந்தில் பங்கஸ்

களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென சிறிலங்கா அரசு அளித்துள்ள வாக்குறுதி அர்த்தமற்றதாகும். இவ்வாறு கொழும்பிலுள்ள சர்வதேச விவகாரங்களிற்கு பொறுப்பான கத்தோலிக்க தேவாலயங்களின் கவுன்சில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக ஐ. நா மனித உரிமை கவுன்சிலுக்கு அனுப்பி வைத்துள்ள அதன் வருடாந்த மாநாட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் இலங்கையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாமலிருக்கும் இனப்பிரச்சினை வடகிழக்கு வசதி, மருத்துவ வசதியின்றி மக்கள் உள்ளனர்.

இனப்பிரச்சினை இல்லை வடகிழக்கில் இருப்பது பயங்கரவாதம் இதை இராணுவ நடவடிக்கை மூலமாகவே தீர்க்கவேண்டுமென்ற அரசின் வாதம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பெரும் தடையாகவுள்ளது. இந்நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அரசியல் அமைப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை பாதுகாப்பு நிலை நிறுத்தப்படும் வரை இலங்கையில் சகஜநிலை நிலவுவதாக கருதுவது தவறாகும்.

தற்போதைய நிலையில்

# மாநாடு ரொறன்ரோவில்

## மூன்று தினங்கள் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

கனடா ரொறன்ரோ நகரில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் உலகத் தமிழர் பண்பாட்டு கழகத்தின் ஆறாவது மாநாட்டில் அனேக தமிழறிஞர்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் ஆகிய நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றனர்.

ரொறன்ரோ யோர்க் பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் 19, 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது பல்கலைக்கழக உள்ளரங்குகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் வாசித்தல் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆக்கங்களுக்கானபரிசளிப்பும் இடம்பெறும் பல்கலைக்கழக வெளிமைதானத்தில் அமையவிருக்கும் வெவ்வேறு அரங்குகளில் கலைநிகழ்வுகள் இடம்பெறும்

மாநாட்டினையொட்டி பல்வேறு நாடுகளிலிருந்தும் புரா தன தமிழ் ஏடுகள் நூல்கள் ஆகியவற்றை திரட்டி மறுபிரசுரம் செய்து நூலாக வெளியிட கனடா கிளை திட்டமிட்டுள்ளது. தமிழ் மக்களின் பண்பாட்டை கனடாவில் வாழும் ஏனைய இனத்தவர்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில் அலங்கார ஊர்திகளின் பவனியும் பரத நாட்டியம், கும்மி, நடனம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

# 300 பரல் தார்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு றுகுணு கப்பலில் 300 பரல் தார் எடுத்துவரப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் தெரிவித்தார்.

இவற்றில் அரைப்பகுதி 'றுகுணு' கப்பலில் இருந்து இறக்கி யாழ் மாநகரசபைக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வீதிகள் புனரமைப்புப் பணி இம்மாத இறுதிப் பகுதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (பா)

# தாதியர் போட்டிப் பரீட்சை வினாத்தாள் வந்துசேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

மாணவ தாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இவ் வினாத்தாள்களை யாழ் கல்வித் திணைக்கள வலயம் - 1ஐச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தம்முடன் எடுத்துவந்துள்ளார்.

இதற்கான போட்டிப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் சுமார் ஐந்து பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# உயர்தர ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு

(வடமராட்சி)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கோட்ட ரீதியாக வள ஆளணியினர் தெரிவு செய்யப்பட்டுத் தேசிய கல்வி நிலையத்தினரால் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

தமிழ்மொழி மூலப் பாடசாலையைப் பொறுத்தளவில் பத்து பாடசாலைகளுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு ஆளணியினர் தெரிவு செய்யப்படுவர்.

பொருளியல், வியாபாரக் கற்கை, கணக்கியல், வியாபாரப் புள்ளியியல் ஆகியன நான்கு பாடங்களாகும்.

பொருத்தமான அபேட்சகரிடமிருந்து விண்ணப்பங்களை 18ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக யாழ். வலயம் 2 கல்விப் பணிப்பாளர் கல்விக்கோட்ட ரீதியாக கோரியுள்ளார். (யோ)

# சேலைன் மருந்தில் பங்கஸ் சுகாதார அமைச்சு எச்சரிப்பு

(கொழும்பு)

இறக்குமதியாகும் சேலைன் திராவகம் குறித்து சகல மருத்துவ வட்டாரங்களும் எச்சரிக்கையாக இருக்கும்படி சுகாதார அமைச்சு பணித்துள்ளது. இத்திராவகத்தில் பங்கஸ் தாக்கம் காணப்படுவதாக அறியப்பட்டதையடுத்தே இந்த எச்சரிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பங்கஸ் தாக்கம் இந்தியாவிலுள்ள மருந்தகங்களில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சேலைன் உற்பத்தி நிறுவனமே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஏககாலத்தில் இம்மருந்துகளை இறக்குமதி செய்வதென்பது குறிப்பிடத்தக்கது. எனினும் கடந்த வருடமே இம்மருந்துகளில் பங்கஸ் தாக்கம் காணப்பட்டதையடுத்து இலங்கையில் இதன் இறக்குமதிதடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம்மருந்து தொகுதி ஏதும் இலங்கையினுள் வந்துள்ளதா என்பதை பரிசீலிப்பதில் தற்போது அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

# சரஸ்வதி மண்டப அகதிகள் வவுனியாவிற்கு மாற்றம்

[கொழும்பு]

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இயங்கிவந்த அகதிமுகாம் எதிர்வரும் 27ஆம் திகதி மூடப்படுவதையடுத்து அங்கு தங்கியிருந்த யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த அகதிகள் வவுனியாவிற்கு கொண்டுவரப்படவுள்ளனர். மேற்படி மூன்று மாவட்டங்களிலும் உள்ள 74 குடும்பங்களைச் சேர்ந்த 234 பேர் இவ்வாறு வவுனியா கொண்டு வரப்படுகின்றனர்.

இவர்கள் வவுனியா ரயில் நிலையம் அருகில் உள்ள நலன்புரி நிலையத்தில் தற்காலிகமாக தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நடாத்தப்படும் மரநடுகைப்போட்டி திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும் நாளை 19 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

## எறிகணை தாக்கு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து திங்கள் இரவு 8-00 மணியளவில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கிப் பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த வயல் ஓரங்களில் வீழ்ந்து வெடித்தன.

மேலும் சிறிலங்கா வான்படையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்றுக் காலை 6-30 மணியளவில் மூளாய், பொன்னாலை, சுழிபுரம் பகுதிகளின் கரையோரங்களையும், கடற்பரப்புக்களையும் நோட்டம் இட்டுச் சென்றது. (41)

## ஒளிவழங்கு சேவை

(நல்லூர்)

ஆண்டு 11, 12 நிலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் தமது பாடங்களை மீட்டல் செய்யும் நோக்குடன் ஒளிவழங்கும்சேவை சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

## கண்டெடுப்பு

விக்னேஸ்வரி சபாரட்ணம், சித்திரவேல் நாயகமணி கந்தையா, அருணா தனபாலரட்ணம், பவளம் கிருஷ்ணசாமி, சீனித்தம்பி செல்வலட்சுமி, சுவாமிநாதன் சிவனேசன் ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## புதிய நியமனம்

கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளராகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் டாக்டர் விக்கிரம வீரசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரசார பீரங்கியாக காமினி தொழிற்படுவார்?

(கொழும்பு)

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் பிரசார நடவடிக்கைக்கு முக்கிய நபராக முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா காணப்படுவார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இதனைஒரு சவாலாக எடுத்து நடாத்துவார் என எதிர்பார்ப்பதாகவும் ஆனால் காமினி திசநாயக்கா பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படுதல் தாமதமாவது இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

## நூற்றாண்டு விழா

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தினரின் சுவாமி விவேகானந்தர்சிக்காகோ பிரசங்க நூற்றாண்டு விழா மாநாடு எதிர்வரும் 24ஆம் 28 ஆம் திகதிகளில் முறையே கைலாசபதி கலையரங்கிலும், நல்லூர் இளங் கலைஞர் மன்றத்திலும் நடைபெறும். ஆய்வுரைகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## நினைவு பேருரை

யாழ் பல்கலைக்கழகதுணைவேந்தர் காலஞ்சென்ற சு. வித்தியானந்தன் நினைவுப்பேருரை இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இப்பேருரையை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மனநோயியல் துறைத் தலைவர் வைத்தியகலாநிதி. தயாசோமசுந்தரம்அவர்கள்நிகழ்த்தவுள்ளார் 'தன்னாத்மாவைத்தேடி அலையும் மனிதன்'' என்னும் பொருள் பற்றியதாக இந்த இரண்டாவது நினைவுப்பேருரை அமையும்.

## சுதந்திரக் கட்சிதலைவியாக சிறிமாவோ தொடருவார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் இம் மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளத சுதந்திரக் கட்சித்தலைமை அலுவலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

கட்சியில் முன்னர் இருந்த போட்டியினால் மேற்படி செயற்குழு கூட்டம் ஒன்பது வருடங்களாக நடைபெறவில்லை என்றும் அனுராபண்டாரநாயக்கா கட்சியை விட்டு நீங்கியபின்னர் இச் செயற்குழு கூட்டம் கூட்டப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய செயற்குழுக் கூட்டத்தில் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்படப்போவதில்லை என்றும் தொடர்ந்து சுதந்திரக்கட்சித் தலைவி என்ற பதவியில் சிறிமாவோ பண்டாரநாயக்க இருப்பார் என்றும் உப தலைவர் பதவி சந்திரிகா குமாரணதுங்க, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆகியோருக்கு பெரும்பாலும் வழங்கப்பட இருப்பதாகவும் தெரியவருகின்றது.

## கணக்கெடுப்பு

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாலர் பாடசாலை பற்றிய கணக்கெடுப்பு நடாத்த வட-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு பணித்துள்ளதால் சகலபாலர் பாடசாலைகளினதும் பொறுப்பாசிரியர்கள் கல்விக்கோட்டத்தின் திட்டமிடல் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று நிரப்பித்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

## மலசலகூட வசதியின்மை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் பாடசாலையில் போதிய மலசலகூட வசதி இல்லையென தெரிவிக்கப்படுகின்றது. தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம், நாரந்தனை கணேச வித்தியாலயம் ஆகியன இணைந்து இயங்கும் இப்பாடசாலையில் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக மலசல கூடங்கள் தற்போது பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையில் இருப்பதாகவும் மாணவர்கள் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் ஆகையால் அவர்கள் வீடுகளில் உள்ள மலசல கூடங்களுக்குச் சென்று வருவதாகவும், ஆசிரிய, ஆசிரியைகளே மேற்படி பற்றாக் குறையினால் பாதிக்கப்படுவதாகவும் அதுவும் குறிப்பாக தூர இடங்களில் இருந்து வருவோர் பெரும் 'சங்கடத்தை' எதிர்நோக்குவதாகவும் பிரஸ்தாப வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

பொதுசன நூலகம், யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்,

## க.பொ.த(சா)சித்திபெற்றோர் ஆசிரிய நியமனம் பெறலாம்

### அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

மலையகத்தில் க,பொ,த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் குறைவாக இருப்பதால் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்' விரைவில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளிவரவுள்ளது,

க.பொ.த சாதாரண தர தகைமையுடன்தெரிவுசெய்யப்படுபவர்கள் நிரந்தரம் ஆகும் போது உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்'

## பிரேமா உருவச்சிலைக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி பிரேமதாசவின் உருவச்சிலைக்கு 24 மணிநேர ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சிலை திறக்கப்பட்ட தினம் முதல் ஆறு பொலிஸ் அதிகாரிகளும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் இப்பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## பள்ளிவாசலுக்கான நிலம் சிங்களவரால் அபகரிப்பு

(அம்பாறை)

இறக்காமம் பகுதியில் நிலங்கள் சிங்களவர்களால் சூறையாடப்பட்டு வருகிறது இவ்வாறு சம்மாந்துறை பிரதேச சபையில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் யூ எல் கலீல் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், எட்டாம் கட்டைப் பகுதியில் பள்ளிவாசலுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலமும் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது அங்குள்ள நிலங்களுக்கு பெர்மிட் வழங்கப்படவுமில்லை அதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவும் இல்லை எனினும் சிங்களவர் குடியேற்றம் தொடர்ந்து வருகிறது என்றும் குறிப்பிட்டார்

## யாழ் மாவட்ட மாமரங்களில் பூச்சி நோய் தாக்கம்

### கட்டுப்படுத்தக் கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் மாமரங்களில் பூச்சி நோய் தாக்கங்கள் ஏற்பட்டு மரம் செழிப்பு குறைந்து விளைவு தராமல் சில இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது இவற்றில் மாவிலை தத்தியின் தாக்கமும் ஒன்றாகும் இத்தத்திகள் பூக்களிலும் இளம் குருத்துக்களிலும் சாற்றை உறிஞ்சுவதனால் பூக்களும் இளம் குருத்துக்களும் கருகுகின்றன அத்துடன் பூச்சிகளின் கழிவுகளால் இலைகள் கறுப்பு நிறமடைகின்றன மாமரம் போன போகம் புதிதாக வந்த கிளையிலேயே அடுத்த போகம் காய்ப்பதனால் இந்த முறை மட்டுமல்ல அடுத்த போகமும் மாமரம் பலன் தராமல் போகலாம்- இதை கட்டுப்படுத்த லெபேசிட் அல்லது பென்தியோன் ஒரு அவுன்ஸ் ஒரு கலன் நீரில் கலந்து விசிற வேண்டும்.

இரண்டாவதாக கிளைகள் பின்னோக்கி படுவது அவதானிக்கப்படுகின்றது- பட்ட கிளைகள் பட்ட பகுதியிலிருந்து 2'' க்கு கீழ் பச்சையாக உள்ள பகுதியுடன் வாளால் மட்டமாக அரிந்து விட்டு வெட்டிய பகுதிக்கு போடோ கலவையை பூசலாம்- போடோ கலவை என்பது நீறிய சுண்ணாம்பையும், துரிசையும் (செப்பு சல்பேற்று) தனித்தனியே நீரில் சேர்த்து பசையாக்கி பின்னர் ஒன்றாக கலந்து எடுப்பதாகும். இதை வெட்டிய இடத்தில் பூசிவிடலாம்-

மூன்றாவதாக கறையான் தாக்கம் இருப்பதனாலும் செழிப்பு குறைவடையலாம் அடிக்கடி நீர்ப்பாசனம் செய்வதன் மூலமும். கறையானின் விருந்தாக பயன்படும் குப்பை கூளம் சருகு இல்லாமல் துப்பரவாக வைத்திருப்பதன் மூலமும் குறைக்க முடியும்-

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஐ. தே. க. கண்டியில் ஆரம்பிக்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டம் கண்டி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் பிரசாரக் கூட்டத்தை இம் மாதம் 29-ம் திகதி ஜனாதிபதி கண்டி மாவட்டத்தில் ஆரம்பித்து வைப்பார் என்றும் இக் கூட்டத்திற்கு கண்டி மாவட்ட ஐ. தே க பாராளுமன்ற, மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

இதேவேளை சகல மாவட்டங்களிலுமுள்ள ஐ. தே க. வைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தேர்தல் பிரசாரம் எப்படி அமையவேண்டும் என ஆலோசனை தெரிவித்துள்ளார்;

தேர்தலின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்குடன் இதனை ஜனாதிபதி செய்ய முற்படுவதாகவும் ஜனாதிபதி செயலக பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை சகல பிரதேசங்களிலும் முக்கிய பதவிகளுக்கும் ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்கள் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குற்றவாளி என்பதற்காக நான் மறைந்திருக்கவில்லை

### சொத்தி உபாலி தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்: எனக்கு எதிராக செயற்படும் என்னை கொலை செய்ய முயற்சி செய்யும் ஒருவர் இது வரையில் 47 கொலைகளை செய்துள்ளார் ஆனால் உண்மை ஏதும் வெளியாகவில்லை. உண்மை ஒரு நாள் வெளியாகும். இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகத்தலைவர் என வர்ணிக்கப்படும் சொத்திஉபாலி தெரிவித்துள்ளார்.

நான் குற்றவாளி என்பதற்காக தலைமறைவாகியிருக்கவில்லை எனது பாதுகாப்பிற்காகவே மறைந்திருந்தேன். எந்தக் கொலையும் செய்யவில்லை கொள்ளையடிக்கவும் இல்லை என் மீது வீணாக குற்றம் சுமத்தப்பட்டது. பொலிசார் விசாரணை செய்தால் எல்லா உண்மைகளையும் வெளியிடுவேன் கைது செய்யப்படாமல் இருந்திருந்தால் வெளிநாட்டுக்கு தப்பிப் போய் பாதாள உலகம் பற்றித் தெரிந்த எல்லாவற்றையும் வெளியிட்டிருப்பேன்.

என் மீது பழி சுமத்தவும் அமைச்சர் ஒருவருக்கு கெட்ட பெயர் உண்டு பண்ணவும் சிலர் முயற்சி செய்கின்றனர். நான் கொடியவன் என்றால் எனது கையை வெட்டியவனுக்கு மன்னிப்பளித்திருக்க முடியாது அவர் இன்னும் வாழுகின்றார் என உபாலி குறிப்பிட்டார்.

## ஆதிசக்தி வி. க. சாம்பியன்

(பருத்தித்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் விளையாட்டுக் கழகம் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்திய உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (11 பேர்) கொண்ட ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைத் தட்டி சாம்பியனானது இரண்டாம் இடத்தை நவசக்தி விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தை கண்ணகி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. வடமராட்சியிலுள்ள 24 விளையாட்டுக் கழகங்கள் இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன.

## சகாயவிலை விநியோகம்

(கொழும்புத்துறை)

## அரசாங்க அறிவித்தல்

### மாகாணபிரதிப் பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்

### 1994 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்கட்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக் கூடியவர்களிடமிருந்து மறுபந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
4. மரத்தளபாடங்கள், மரத்தளபாட திருத்த

## விவசாயகடன் தள்ளுபடிக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

விவசாய கடன்பெற்ற 75 ஆயிரம்பேர் திருப்பிச் செலுத்தாத கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா தீர்மானித்துள்ளார். 1971 முதல் கடன் பெற்று சாகுபடி நட்டமடைந்ததினால் திருப்பிச் செலுத்த முடியமல் போன சுமார் ஒரு லட்சம் பேர் இதன்மூலம் நன்மை அடைவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விவசாயிகளின் பூரண தகவல்கள் கிடைத்தவுடன் இது தொடர்பான பணிப்புரைகள் அரச வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மலையக மக்களுக்கு இலங்கை குடியுரிமை

### தொண்டா பெற்றுக்கொடுக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு திரும்பிச் செல்ல முன்னர் விருப்பம் தெரிவித்திருந்த போதும், இப்போது இலங்கையிலேயே தங்கிவிட விழையும் மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யப் போவதாக அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்;

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில் இதுவிடயம் சம்பந்தமாக இருநாட்டு அரசங்கங்களுடனும் பேச்சு நடத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
06 - 01 - 1906

இறப்பு:
18 - 05 - 1993

### திருமதி அனாராசம் தேவராஜா

உங்கள் அன்பு எம்மை விட்டு
அகலாதவை உங்கள் ஆசியும்
அறிவுரையும் என்றும் எம்மை
வழி நடத்தும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய அனைவரும்
பிரார்த்திக்கின்றோம்.

மகன்மார்: பூலோகசுந்தரம் (அமெரிக்கா)
பூலோகஇந்திரன் (பிரான்ஸ்)
மருமக்கள்: லோஜி (அமெரிக்கா)
நீற்றராஜீவறஞ்ஜினி (பிரான்ஸ்)
பேரப்பிள்ளைகள்: மோகன் அமெரிக்கா)
றோய் (பிரான்ஸ்)
றொஷிக்கா (பிரான்ஸ்)
ரஜீவ் (பிரான்ஸ்)

தகவல்:
திரு. திருமதி. D. S. பிறைசூடி
'நிரஞ்சனி'
பண்டத்தரிப்பு (சம்மந்தி)

(8306)

தராமல் சில இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது இவற்றில் மாவிலை தத்தியின் தாக்கமும் ஒன்றாகும் இத்தத்திகள் பூக்களிலும் இளம் குருத்துக்களிலும் சாற்றை உறிஞ்சுவதனால் பூக்களும் இளம் குருத்துக்களும் கருகுகின்றன அத்துடன் பூச்சிகளின் கழிவுகளால் இலைகள் கறுப்பு நிறமடைகின்றன மாமரம் போன போகம் புதிதாக வந்த கிளையிலேயே அடுத்த போகம் காய்ப்பதனால் இந்த முறை மட்டுமல்ல அடுத்த போகமும் மாமரம் பலன் தராமல் போகலாம்-இதை கட்டுப்படுத்த லெபேசிட் அல்லது பென்தியோன் ஒரு அவுன்ஸ் ஒரு கலன் நீரில் கலந்து விசிற வேண்டும்.

ருந்து 2'' க்கு கீழ் பச்சையாக உள்ள பகுதியுடன் வாளால் மட்டமாக அரிந்து விட்டு வெட்டிய பகுதிக்கு போடோ கலவையை பூசலாம்- போடோ கலவை என்பது நீறிய சுண்ணாம்பையும், துரிசையும் (செப்பு சல்பேற்று) தனித்தனியே நீரில் சேர்த்து பசையாக்கி பின்னர் ஒன்றாக கலந்து எடுப்பதாகும். இதை வெட்டிய இடத்தில் பூசிவிடலாம்-

மூன்றாவதாக கறையான் தாக்கம் இருப்பதனாலும் செழிப்பு குறைவடையலாம் அடிக்கடி நீர்ப்பாசனம் செய்வதன் மூலமும், கறையானின் விருந்தாக பயன்படும் குப்பை கூளம் சருகு இல்லாமல் துப்பரவாக வைத்திருப்பதன் மூலமும் குறைக்க முடியும்-

## வாதுவ கப்பலின் சேவை நிறுத்தப்படலாம்?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பல நோ. கூ. சங்கங்கள் 2000 மெற்றிக் தொன் உணவு மற்றும் பொருட்களை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வர சம்மதித்தால் ''வாதுவ'' கப்பல் பொருட்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி திட்டப்பணிப்பாளர்செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் வாதுவ கப்பலின் மூலம் வட பகுதிக்கு பொருட்கள் எடுத்து வரப்படும் பட்சத்தில் அக் கப்பலில் ஏற்றக்கூடிய 4000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களும் ஏற்றப்பட்டு தயாராக இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால்அதன் சேவை நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கமையவே பல நோ. கூ. சங்கங்கள் 2000 மெற்றிக் தொன் பொருட்களும் தனியார் 2000 மெற்றிக் தொன் பொருட்களும் ஏற்ற முன் வரும் பட்சத்தில் இதன் சேவை நடைபெறும்என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் சகல பல நோ. கூ. சங்கங்களிற்கும் இது தொடர்பாக அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

இதன்படி குறிப்பிட்ட நடை முறைக்கு பல நோ.கூ. சங்கங்கள் சம்மதிக்கும் பட்சத்தில் இக் கப்பல் சேவை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது-

(தி,பா)

**கிளாலியில் விமானநோட்டம்**

## வெற்றிலைக்கேணி நோக்கி பீரங்கித் தாக்குதல்

(தென்மராட்சி)

தாளையடி, வெற்றிலைக்கேணி கரையோரப்பகுதிகளை நோக்கி கடற்படையினர் கடந்த சனியன்று காலை கடும் பீரங்கி தாக்குதலை நடத்தினர். விசைப்படகு ஒன்றில் வந்த படையினரே கரையோரம் நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

வெற்றிலைக்கேணி கடலில் பாரிய கடற்படை கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதேவேளை உலங்கு வானூர்தி புக்காரா விமானம் என்பன கடந்த ஞாயிறன்று இரவு 10 மணியளவில் கிளாலிப் பகுதியில் சுமார் 15 நிமிடங்கள் வரை சுற்றி நோட்டமிட்டது. தாக்குதல் ஏதும் மேற்கொள்ளவில்லை. (86)

## இன்றைய நிகழ்வு

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவு ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுண்டுக் குழிசந்தியில் உள்ள பிரிவு பணிமனையில் தலைவர் திரு. ஏ. ஸ்ரனிஸ் லோஸ் தலைமையில் நடைபெறும். (24)

ராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்திய உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (11 பேர்) கொண்ட ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைத் தட்டி சாம்பியனானது இரண்டாம் இடத்தை நவசக்தி விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தை கண்ணகி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. வடமராட்சியிலுள்ள 24 விளையாட்டுக் கழகங்கள் இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன.

## சகாயவிலை விநியோகம்

(கொழும்புத்துறை)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சங்க அங்கத்தவர்களுக்கான விவசாயிகளுக்கு மலிவு விலையில் மண்வெட்டிகளையும், துவிச்சக்கர வண்டிகளையும் விநியோகிக்கவுள்ளது.

இதனைச்சகாய விலையில் பெற விரும்பும் அங்கத்தவர்கள் தத்தமது பகுதிச்சங்கக் கிளைகள் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கான 'அலுவலகமும் விற்பனைநிலையமும்' கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன்னால் உள்ள தனியார் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது இத் திறப்பு விழா வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு வி. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரிவைத்தியகலாநிதிபொ.இராமநாதன் அலுவலகத்தையும் விற்பனை நிலையத்தையும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இவ்விழாவிலே தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சிப் பொறுப்பாளர் திருவளவன் யாழ். மாவட்ட பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் திரு. ச. சுவாமிநாதன் உட்பட இன்னும் பலர்கலந்து கொண்டனர். இங்கு திறந்து வைக்கப்பட்ட விற்பனை நிலையத்தில் கால்நடைகளுக்கான உணவு வகைகள், மருந்து வகைகள் விற்பனை செய்யப்படுவதுடன் பால் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## 1994ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள நிறுவனங்கட்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக் கூடியவர்களிடமிருந்து மறு பந்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள்
2. பாவனைப் பொருட்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)
3. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
4. மரத்தளபாடங்கள், மரத்தளபாட திருத்த வேலைகள்.
5. உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
6. பிளாஸ்டிக் பொருட்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பைவாளி முதலியன)
7. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருட்கள், ஆமைப்பூட்டுக்கள், வாளி வகைகள்,குப்பைவாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியவை.
8. மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்.
9. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறு கட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டிடத் திருத்தத்திற்கு அவசியமான பொருட்கள், கட்டிடத் திருத்தம்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப் உட்பட)

### பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சனசமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

### விண்ணப்பித்தல்

மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தைக் கீழ்க் காணும் விலாசத்திலுள்ள எமது பணிமனையில் ரூ. 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 01-06-94 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1994ஆம் ஆண்டிற்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் பொழுது, கேள்விகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டும் கோரப்படும்.

**வைத்திய கலாநிதி என். விவேகானந்தன்,**
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்.
சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.


(சி-9438)

உங்கள் அன்பு எம்மை விட்டு
அகலாதவை உங்கள் ஆசியும்
அறிவுரையும் என்றும் எம்மை
வழி நடத்தும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய அனைவரும்
பிரார்த்திக்கின்றோம்.

மகன்மார்: பூலோகசுந்தரம் (அமெரிக்கா)
பூலோகஇந்திரன் (பிரான்ஸ்)
மருமக்கள்: லோஜி (அமெரிக்கா)
நீற்றாஜீவறஞ்ஜினி (பிரான்ஸ்)
பேரப்பிள்ளைகள்: மோகன் அமெரிக்கா)
றோய் (பிரான்ஸ்)
றொஷிக்கா (பிரான்ஸ்)
ரஜீவ் (பிரான்ஸ்)

தகவல்:
**திரு. திருமதி. D. S. பிறைசூடி**
'நிரஞ்சனி'
பண்டத்தரிப்பு (சம்மந்தி)
(8306)

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



திதி 18-5-94

**திரு. இரத்தினம் சபாரத்தினம்**
(உரிமையாளர், பாமா காட்வெயர்ஸ்)

மலர்வு: **23-09-1934** உதிர்வு: **13-05-1989**

அன்பும் அறிவும் ஊட்டிய அப்பாவே - எங்களுக்கு
அறிவு வருமுன் காலன் உங்களைப் பிரித்தானே
உங்கள் புகழினை ஊரவர் போற்றுகையில் - நீங்கள்
இங்கிலை நாமோ கேட்டுளம் நெகிழ்கிறோம்.

இங்ஙனம்
கொக்குவில்மேற்கு, மனைவி,பிள்ளைகள், மருமகன்,
கொக்குவில், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
(சி/9443)


## கொழும்பு ஸ்ருடியோ

தொழில் நுட்பத்தில் 35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான
- Line, Half tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறின் Silk Screen
- Re copy பழைய படங்களில் இருந்து புகைப் படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
தரமாகப் பெற்றுக்கொள்க,

**கொழும்பு ஸ்ருடியோ**
55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9399)

பொது நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

**சிந்தனைக்கு**

கேடு இருவிதம்; நமக்கு நேரிடும் துரதிர்ஷ்டம் ஒன்று; பிறர்க்கு ஏற்படும் நற்பேறு மற்றையது.

-- ஆம்ப்ரோஸ் பியர்ஸ்


**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05


## டி. பி.க்கு சவாலாகி விட்ட காமினி விவகாரம்

காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக்கி அமைச்சராக்கும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் முடிவானது தற்பொழுது அவருக்கு பெரும் கௌரவப் பிரச்சினையாகவே உருவாகி விட்டது. இதுவரை இவ்விடயத்தில் அவர் எடுத்த நடவடிக்கைகள் எவையும் பெரும் வெற்றி அளிக்காததோடு, அவரது கௌரவத்திற்கும், செல்வாக்கிற்கும் சவாலான விடயமாக மாறிவிட்டது

காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக்கும் முயற்சிக்கு முதலில் சிறிசேன கூரே வடிவில் எதிர்ப்பு கிளம்பியதாயினும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் இதனை முழுமையாகவே எதிர்த்து நிற்பது தெரிகின்றது. ஆனால், இதனை ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கா ஆரம்பத்தில் புரிந்து கொள்ளவில்லை அல்லது தவறான கணிப்பீடு செய்திருந்தார் என்றே எண்ண வைக்கின்றது

சிறிசேன கூரேயை கட்சிப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கி விட்டால் காமினி பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கான தடைகள் பெரும்பாலும் நீங்கிவிடும் என்றே டி. பி. விஜேதுங்கா முதலில் கருதினார். இதன் பிரகாரம் எதிர்ப்புக்கள் வலுவாகக் கிளம்பியபோதும் கூரேயை முழுமூச்சுடன் நின்று வெளியேற்றி விட்டார். அத்தோடு காமினியின் ஆதரவாளரை கட்சியின் செயலாளராகவும் நியமித்தார்,

ஆனால், இதன்மூலம் கட்சி அமைப்பிற்குள் காமினியின் உயர்ச்சிக்கான தடைகள் நீக்கப்பட்டனவே ஒழிய, பாராளுமன்றத்திற்குள் காமினியைக் கொண்டு வரும் முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை, இவ்விடயத்தில் டி பி விஜேதுங்கா பெரிய அளவில் எதிர்பாராத இடத்தில் இருந்து எதிர்ப்பு கிளம்பியதே இதற்குக் காரணமாகும் அதாவது, காமினி பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எவரும் பதவி விலகத் தயாராக இல்லாமையே இந் நிலையை உருவாக்கியது

ஆனால் இது குறித்தும் டி. பி. விஜேதுங்கா முயற்சி செய்யாமல் இல்லை. இதனையும் ஒரு அம்சமாகக் கொண்டே பிரேமதாசா குடும்பத்தினருடன் நெருக்கமான உறவைப் பேண முற்பட்டார். பிரேமதாசா குடும்பத்தினருடன் ...

# 'சொத்தி' உபாலியின் சகோதரர் இந்திரபாலா சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மெய்க்காவலர்

## சிறிசேன கூரே பரபரப்பான பேட்டி

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நற்பெயருக்கு எவ்வாறு களங்கம் உண்டாக்கினரோ அதேபோன்று சொத்தி உபாலி மூலம் எனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றனர். இவ்வாறு அமைச்சர் சிறிசேன கூரே சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கேள்வி: சொத்தி உபாலி உங்கள் ஆள் என்று கொழும்பில் வதந்திகள் உலாவுகின்றன. அவரை உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?

பதில்: ஏன் தெரியாது? சொத்தி உபாலியை நான் நன்கறிவேன். கடைசியாக நடந்த ஜனாதிபதி தேர்தலில் இப்பையனே மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா போன்று ஐ. தே. கவின் செயற்குழுவிற்கு பூரண ஒத்துழைப்பு தந்தான் கட்சி சட்டப்படி ஜனாதிபதி 50 பேர்களை பிரேரிக்கமுடியும் அப்படி அவரால் பிரேரிக்கப் பட்டவர்களில் உபாலியும் ஒருவர் அவரின் உண்மையான பெயர் ரஞ்சித் 1979 இல் நான் மேயராக இருந்த போதே உபாலியை முதலில் சந்தித்தேன். தனக்கு கொழும்பு மாநகர சபை எடுத்துக் கொண்ட நிலத்திற்கு பணம் தரவில்லை என அவர் மாநகரசபைக்கு வெளியே கூச்சலிட்டுக் கொண்டு நின்ற போதே அவரைக் கண்டேன். அவரின் ஒரு கை காயமடைந்தது முதல் நான் அவருக்காக அனுதாபப்பட்டேன் இதனால் அவர் சொத்தி என அழைக்கப்பட்டார்.

இந்திரபாலாவை தெரியுமா? அவர்தான் உபாலியின் சகோதரர், திருமதி பண்டாரநாயக்காவின் மெய்க்காவலராக இருந்தவர் அச்சமயத்தில் உபாலி கட்சி உறுப்பினராக இருக்கவில்லை. 1983 இல் சுகததாச விளையாட்டரங்கு நிர்மாணிப்பில் உபாலிக்கு ஒப்பந்தம் ஒன்றைக் கொடுக்க பிரேமதாசா முடிவு செய்தார். அவரது வேலை அர்ப்பணிப்பு பிரேமதாசாவை கவர்ந்தது. ஊரடங்குவேளையிலும் உபாலியும் அவரது ஆட்களும் பணியாற்றினர். பின் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அவரும் அவரது ஆட்களும் ஐ. தே கவிற்கு ஆதரவாக செயற்பட முன்வந்தனர். ஜே வி பியின் மிரட்டல் இருந்தும் அவரது குழுவினர் பிரசார மேடைகள் அமைத்தனர். அலங்கரித்தனர். சுவரொட்டிகளை ஒட்டினர் பின் ஜனாதிபதியாக பிரேமதாசா வந்ததும் உபாலிக்கு உயரிய இடம் அளித்தார். அதனால் அவரும் முழுநேர கட்சி உறுப்பினர் ஆனார் அனைத்து கம் உதாவ விழாக்களிலும் உபாலியே கன்ரீன்களை நடத்தினார்.

கேள்வி: ரிசர்வ் பொலிசில் அவரை சப்இன்ஸ்பெக்டராக சேர்ப்பதில் உங்கள் பங்களிப்பு உண்டா?

பதில்: என்ன கதை! நான் இது குறித்து பத்திரிகைகளில் வரும் வரை அவர் ரிசர்வ் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் என்பதை அறிந்திருக்கவில்லை.

கேள்வி: அவர் உங்கள் மெய்க்காவலராக குறிப்பாக தேர்தல் பிரசாரத்தின் போது இருந்துள்ளாரா?

பதில்: அவர் ஒருபோதும் எனது மெய்க்காவலராக இருந்ததில்லை தேர்தல் காலத்தில் அவரும் வேறுபலரும் எம்மை சுற்றியிருந்தனர். தேர்தல் காலத்தில் எம் பின்னே எல்லாவகையினரும் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் சிலரை மட்டும் பின்னே வரவேண்டாம் என நாம் கூறமுடியுமா? அண்மையில் கூட இப்போதைய ஜனாதிபதி ஒரு கலைகண் காட்சியை திறந்து வைத்த போது சொத்தி ஜனாதிபதி அருகிலிருந்தார்.

கேள்வி: இத்தகைய வதந்திகள் அனைத்தும் இருந்தும் உங்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தபின் ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் உங்கள் உறவு எவ்வாறு உள்ளது?

பதில்: ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் எனது உறவு நன்றாகவே உள்ளது. நான் எப்போதும் கட்சிக்காகவே உழைப்பேன் ஜனாதிபதி என்னை அமைச்சர் பதவியிலிருந்து விலகுமாறு கேட்டுக்கொண்டால் நான் அப்படியே செய்வேன்; அது அவரின் உரிமை, நான் கேள்வி எழுப்பமாட்டேன்.

கேள்வி: சொத்தி உபாலி ஒரு கோஷ்டியின் தலைவர் அவரைக் கைதுசெய்ய நீங்கள் அனுமதிக்கவில்லை என கூறப்படுகிறதே:

பதில்: சொத்தி கோஷ்டித் தலைவனே அதில் சந்தேகமில்லை. கொழும்பில் இப்படியானவர்கள் பலர் உண்டு. அவர்கள் இப்போது தமக்குள்ளேயே மோதுவதாக நான் நினைக்கின்றேன். சொத்தி உபாலிக்கு உதவுமாறு நான் எந்த உயர் பொலிஸ் அதிகாரியுடனோ கீழ்மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுடனோ பேசவில்லை. நான் ஒருபோதும் பொலிசார் நடவடிக்கையில் தலையிடமாட்டேன்

சம்பவங்கள் சக்கரம் போல் சுழல்கின்றன முன்னர் பிரேமதாசாவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த பிரசாரங்கள் நடந்தது. இப்போது அவை எனக்கு நேரே திரும்பியுள்ளன, என் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் இம் முயற்சிகளால் நான் மிகவும் புண்பட்டுள்ளேன். விரக்தியடைந்துள்ளேன் சிலசமயம் கோபம் கூட ஏற்படுகின்றது. நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த நான் இப்போது முதன்மையான இலக்காகி விட்டேன். என் மீது களங்கம் சுமத்தும் இவர்களது கரங்கள் எவ்வளவு சுத்தமானது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

# தேர்தலில் ஜே. வி. பி. பங்கேற்க ஆளும் ஐ. தே. க தீவிர முயற்சி

## சோமவன்ச அமரசிங்கவுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் மற்றும்பொது தேர்தலின் போது ஜே. வி. பி. அதன் அணியினரையும் ஈடுபடுத்துவது தொடர்பாக பூர்வாங்க முயற்சியில் ஐ. தே. க இறங்கியுள்ளதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசு ஜே வி பி. யுடன் தொடர்புடைய பலருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இவர்கள் பின் சோமவன்ச அமரசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிய வந்துள்ள ... உறுதி செய்துள்ளன.

அரசாங்க உயர்மட்டத்தினரின் ஆலோசனைக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தென் மாகாண சபை தேர்தலை தொடர்ந்து இந் நடவடிக்கை ஆரம்பமானதாகவும், தென் மாகாணசபை ஐ தே க தோல்விக்கு காரணம் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஜே வி பி ஒத்துழைப்பு வழங்கியது தான் என நம்பும் ஐ தே க முக்கியஸ்தர்கள் ஜே வி பி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் இவ்வாறான ஒத்துழைப்பை முறியடித்து விடலாம் என்றும் இதன் ... தொடர்பான முயற்சிகள் தற்போது நடைமுறைப்படுத்தப் பட இருப்பதாகவும் இதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு உயர் அதிகாரிகளிடம் ஐ தே கவை சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது இதன் மூலம் ஜே வி பியை தேர்தலில் போட்டியிட வைக்க முடியும் என்றும் இதனால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பை நிறுத்தி கொள்ள முடியும் என நம்பப்படுகிறது

ஜே வி பி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக பகி... விலக்கி கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தேர்தல் பொது தேர்தல் இரண்டையும் ஒரே நாளில் நடத்த வேண்டும் என்றும் அந்தநிலையில் மட்டுமே தாம் தேர்தலில்போட்டியிடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜே வி பி உட்பட மேலும் இரு இடதுசாரி கட்சியை சேர்ந்த இருவர் ஜனாதிபதி வேட்பாளர் தேர்தலில் நிறுத்தப்பட வேண்டும் என்றே ஐ தே க. வினர் எதிர்பார்க்கின்றார்கள். இவ்வாறு மூவர் எதிர்க்கட்சியின் கீழ் போட்டியிடுவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சி ...

**புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்**

**1994 - 05 - 18**

**புதன் இரவு**

8. 01 - முதல் முதல் சயனைற் அருந்தி வீரச்சாவெய்திய பகீன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''சயனைற் சகாப்தம்''

8. 20 - ஏர்முனை ''என்னைத்தெரியுமா'' சுய சரிதை

8 30 - செய்திகள்

8 40 - நாடகம் ''முடிவு''

**1994 - 05 - 19**

**வியாழன் காலை**

7 02 - மாவீர வணக்கம்

7. 15 - விடுதலைக் கீதங்கள்

தினார். இதன் பிரகாரம் எதிர்ப்புக்கள் வலுவாகக் கிளம்பியபோதும் கூரேயை முழுமூச்சுடன் நின்று வெளியேற்றி விட்டார். அத்தோடு காமினியின் ஆதரவாளரை கட்சியின் செயலாளராகவும் நியமித்தார்,

ஆனால், இதன்மூலம் கட்சி அமைப்பிற்குள் காமினியின் உயர்ச்சிக்கான தடைகள் நீக்கப்பட்டனவே ஒழிய, பாராளுமன்றத்திற்குள் காமினியைக் கொண்டுவரும் முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை, இவ்விடயத்தில் டி பி விஜேதுங்கா பெரிய அளவில் எதிர்பாராத இடத்தில் இருந்து எதிர்ப்பு கிளம்பியதே இதற்குக் காரணமாகும் அதாவது, காமினி பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட எவரும் பதவி விலகத் தயாராக இல்லாமையே இந் நிலையை உருவாக்கியது

ஆனால்! இது குறித்தும் டி. பி. விஜேதுங்கா முயற்சி செய்யாமல் இல்லை. இதனையும் ஒரு அம்சமாகக் கொண்டே பிரேமதாசா குடும்பத்தினருடன் நெருக்கமான உறவைப் பேண முற்பட்டார். பிரேமதாசா குடும்பத்தினருடன் நட்பைக் காட்டிக் கொள்வதன் மூலம் தேசியப் பட்டியல் எம். பிக்கள் சிலரது மனத்தை மாற்றலாம் அல்லது நிர்ப்பந்திக்கலாம் என எண்ணினார்.

ஆனால், அவர்கள் உடனடியாக மனம் மாறியதாக இல்லை. பிரேமா குடும்பமும் நிர்ப்பந்திக்கத் தயாராக இல்லைபிரேமதாசா குடும்பத்தில்எவருக்காவது பாராளுமன்றஉறுப்பினர் பதவி வழங்கி, அமைச்சர் பதவியும் வழங்கினால் பதவி விலகத்தயார்என்றும் அதுவும்எழுத்து மூலம் தரப்பட வேண்டும் எனவும் சில தேசியப் பட்டியல் எம். பிகள் கோரினர். ஆனால், பலர் அவ்வாறும் வாய் திறக்கவில்லை மௌனமாகவே இருந்தனர்.

அடுத்த கட்டமாக, பதவி விலகுவதற்கென பெரும் தொகைப் பணத்தைக் கைமாறவும் டி. பி. விஜேதுங்கா தரப்பு தயாராக இருந்தது. சமீபத்திய தகவலின்படி எட்டுக் கோடி ரூபா வரை பேரம் பேசப்பட்டதாகவும் தெரியவருகின்றது. ஆனால், தேசிய பட்டியல் எம். பி கள் அதற்கும் சம்மதம் தெரிவிப்பதாக இல்லை.

இவ்வாறான முயற்சிகள் ஒருபுறம் இருக்க, பாராளுமன்றத்தையே கலைத்து விடப் போவதாக ஆரம்பம் தொட்டே டி. பி. விஜேதுங்கா மிரட்டி வருகின்றார். ஆனால், அது டி. பி, விஜேதுங்காவின் மிரட்டலாகவே சகலராலும் கருதப்படுவதினால், அதற்கும் எவரும் மசிந்து போவதாகத் தெரியவில்லை.

அதாவது, காமினி திசாநாயக்காவைப் பாராளுமன்றத்திற்குள் கொண்டுவரும் முயற்சியில் தனது முழு அதிகாரத்தையும் சகல வழிமுறைகளையும் ஜனாதிபதி டி- பி- விஜேதுங்கா பயன்படுத்தியுள்ளார் / பயன்படுத்தினார் என்றே கூறலாம்-

ஆனால் காமினிவிவகாரம் டி. பி. விஜேதுங்காவின் செல்வாக்கிற்குகட்சிக்குஉள்ளும், வெளியிலும்இன்றுசவாலான விடயமாக மாறிவிட்டது. இதில், டி. பி. விஜேதுங்கா பெறப்போகும் வெற்றியோ அவரின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடியதாகவும் வளர்ந்து விட்டது;

குறிப்பு: நேற்று மாலை தேசியப் பட்டியலில் தெரிவான எம். எச். அமீட் தமது பதவியை இராஜினாமாச் செய்ததன் மூலம் டி பி விஜேதுங்கா இவ்விவகாரத்தில் வெற்றிபெற்றுவிட்டார் என்றே கூறலாம் ஆனால் இதற்காகப் பரிமாறப்பட்டது எது என்பது வெளிவர இன்னும் சிறிது காலம் செல்லும்

# ஆளும் ஐ. தே. க தவிர முயற்சி

## சோமவன்ச அமரசிங்கவுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் மற்றும்பொது தேர்தலின் போது ஜே. வி. பி. அதன் அணியினரையும் ஈடுபடுத்துவது தொடர்பாக பூர்வாங்க முயற்சியில் ஐ. தே. க இறங்கியுள்ளதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசு ஜே வி பி. யுடன் தொடர்புடைய பலருடன் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் இவர்கள் பின் சோமவன்ச அமரசிங்காவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் தெரிய வந்துள்ளது. இதற்கு சோமவன்ச அமரசிங்கா மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் தகுந்த ஒரு பதிலை அனுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் என அவ் அரசியல் வட்டாரங்கள் மேலும் உறுதி செய்துள்ளன.

அரசாங்க உயர்மட்டத்தினரின் ஆலோசனைக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்டதாகவும்தென் மாகாண சபை தேர்தலை தொடர்ந்து இந் நடவடிக்கை ஆரம்பமானதாகவும், தென் மாகாணசபை ஐ தே க தோல்விக்கு காரணம் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஜே வி பி ஒத்துழைப்பு வழங்கியது தான் என நம்பும் ஐ தே க முக்கியஸ்தர்கள் ஜே வி பி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் இவ்வாறான ஒத்துழைப்பை முறியடித்து விடலாம் என்றும் இதன் மூலம் தொடர்ந்து தன்வசம் வெற்றியை வைத்து கொள்ள முடியும் என நம்புகின்றனர்

இன்னும் தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் தடுத்து வைத்துள்ளவர்கள் விடுதலை மற்றும் கட்சி தடை நீக்கம் தொடர்பான முயற்சிகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் இதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு உயர் அதிகாரிகளிடம் ஐ தே கவை சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது இதன் மூலம் ஜே வி பியை தேர்தலில் போட்டியிட வைக்க முடியும் என்றும் இதனால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பை நிறுத்தி கொள்ள முடியும் என நம்பப்படுகிறது

ஜே வி பி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக பகிரங்க அறிவித்தலொன்று கொடுக்கப்படவுள்ளது இதன் பின்னர் ஜே வி பி அமைப்பின் செயலாளர் சோமவன்ச அமரசிங்கா அவசரகால சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராகவுள்ள சட்ட நடவடிக்கை விலக்கி கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தேர்தல் பொது தேர்தல் இரண்டையும் ஒரே நாளில் நடத்த வேண்டும் என்றும் அந்தநிலையில் மட்டுமே தாம் தேர்தலில்போட்டியிடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜே வி பி உட்பட மேலும் இரு இடதுசாரி கட்சியை சேர்ந்த இருவர் ஜனாதிபதி வேட்பாளர் தேர்தலில் நிறுத்தப்பட வேண்டும் என்றே ஐ தே க. வினர்எதிர்பார்க்கின்றார்கள். இவ் வாறு மூவர் எதிர்க் கட்சியின் கீழ் போட்டியிடுவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சி அபேட்சகருக்கு கிடைக்கும் வாக்குகளை சிதறடிப்பதன் மூலம் ஐ தே. க. அபேட்சகர் ஜனாதிபதியாகதேர்வுசெய்யப்படக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றார்கள்.

1994 - 05 - 18

புதன் இரவு

8. 01 - முதன் முதல் சயனைற் அருந்தி வீரச்சாவெய்திய பகீன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''சயனைற் சகாப்தம்''

8. 20 - ஏர்முனை ''என்னைத்தெரியுமா'' சுயசரிதை

8 30 - செய்திகள்

8 40- நாடகம்''முடிவு'

1994 - 05 - 19

வியாழன் காலை

7 02 - மாவீர வணக்கம்

7. 15 - விடுதலைக் கீதங்கள்

7 30 - செய்திகள்

7 35- பத்திரிகைச் செய்திகள்

7. 40 - விடுதலைக் கீதங்களின் தொடர்ச்சி

# பாஸ்கரலிங்கத்தின் வெளிநாட்டுப் பயணம் குறித்து சந்தேகம்

## பதவி துறக்கும் முயற்சியாம்

(கொழும்பு)

மருத்துவ சிகிச்சைக்காக நிதி அமைச்சின் செயலாளர் கே. பாஸ்கரலிங்கம் திடீரென வெளிநாடு கிளம்பிச் சென்றமை குறித்து பல சந்தேகங்களை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது

வெளிநாடு சென்றுள்ள அவர் இம் மாத இறுதியில் கொழும்பு திரும்புவார் எனவும் சில நாட்கள் தமது அலுவலகத்தில் பணிபுரிந்துவிட்டு மீண்டும் அவர் லண்டனுக்கு மருத்துவ சிகிச்சைககாக சென்றுவிடுவார் எனவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

பாஸ்கரலிங்கம் சென்னை சென்று அங்கிருந்து லண்டன் புறப்பட்டு செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கும் அரசின் உயர்பீடத்திற்கும் இடையில் தற்போது கசப்பு நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இவர் பதவி துறந்து வெளிநாடு செல்ல திட்டமிட்டிருக்கலாம் என கூறப்படுகிறது

யாழ் பல்கலைக் கழகச் சுந்த

# திருடப்பட்ட நூல்கள் நீதிமன்றால் கையளிப்பு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டபின்னர்கொழும்புத் தபாலகத்தில் இருந்து திருடப்பட்ட லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான நூல்கள் கடந்த வாரம் மாஜிகாகந்தை நீதிமன்றத்தினால் யாழ் பல்கலைக்கழக உதவிப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விஞ்ஞான மருத்துவ நூல்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கென கொழும்பு மத்திய தபால் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தபோது அவை திருடப்பட்டன. திருடப்பட்ட புத்தகங்களுடன் கொழும்புகோட்டையில் பொலிசாரிடம் அகப்பட்ட மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலைய ஊழியர் மீது வழக்கு தொடரப்பட்டது தெரிந்ததே.

சிறிலங்கா கடற்படை தாக்குதலுக்குள்ளாகி

# காணாமற் போன தமிழக மீனவர் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டனர்

(சென்னை)

கடந்த வெள்ளியன்று நாகபட்டினத்திலிருந்து கடலுக்கு சென்று சிறிலங்கா கடற்படையினல் சுடப்பட்டு காணாமற்போன 8 தமிழக மீனவர்களில் நால்வர் மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கடலில் மிதந்துகொண்டிருந்த ஒரு படகிலிருந்து இந் நால்வரும் மீட்கப்பட்டனர். இவர்கள் சக மீனவர்களால் கரை சேர்க்கப்பட்டுள்ளனர். குண்டுக் காயம்பட்ட இவர்கள் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையினர் சுட்டபோது படகிலிருந்து நீரில் குதித்து தப்பித்த ஒரு மீனவர் கடந்த சனியன்று இந்திய கடலோர காவற்படையால் மீட்கப்பட்டமை தெரிந்ததே. மேலும் மூன்று மீனவர்களின் கதி என்ன என்பது இதுவரை தெரிய வரவில்லை.

# மாலாவி பொது தேர்தல் பண்டாவின் கட்சி தோல்வி

ஆபிரிக்க நாடான மாலாவியில் நேற்று பொதுத்தேர்தல் நடைபெற்றன சுதந்திரமடைந்து 30 ஆண்டுகளின் பின் முதற்தடவையாக இம்முறை தேர்தல் நடைபெற்றது.

தொண்ணூறு வயதான ஜனாதிபதி தாமுசுபண்டா உடல் நலப்பாதிப்பிற்குள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது

# 5 நேபாள படையினர் சோமாலியாவில் பலி

(மொகதிசு)

சோமாலியாவில் கிளர்ச்சியாளர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஐ.நா அமைதிப்படையின் 5 நேபாள வீரர்கள் கொல்லப்பட்டனர்.

சோமாலிய இரு கிளர்ச்சிக் குழுக்களிடையில் நடைபெற்ற மோதலை சமரசம் செய்ய சென்ற ஐ நா படையினர் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டிலேயே ஐந்து நேபாள படையினரும் பலியாகினர்.

கிளர்ச்சிக்குழுவின் மோதலுக்கிடையில் இப்படை வீரர்கள் சிக்கி இறக்கவில்லை எனவும் இப்படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர் எனவும் ஐ நா அமைதிப்படை அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்.

## வடயேமன் குண்டுவீச்சு

(ஏடன்)

தென்யேமன் தலைநகர் ஏடனுக்கு அருகில் வடயேமன் விமானப்படை குண்டுவீச்சை நடாத்தியுள்ளது;

வடயேமன் இராணுவத்தினரின் கை ஓங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது;

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

## தேர்தல் நடவடிக்கைகள் 'வீடியோ' வில் பதிவு

(சென்னை)

தமிழ் நட்டில் எதிர்வரும் 26-ம் தி-தி நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலின்போது தேர்தல் நடவடிக்கைகள் யாவும் வீடியோ படத்தின் மூலம் பதிவு செய்யப்படவுள்ளது- வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணும் பணி என்பவை படமாகப் பதிவு செய்யப்படும்- இந்தியாவில் தேர்தல் நடவடிக்கை படமாகப் பதிவு செய்யப்படவிருப்பது இதுவே முதல்முறை என்றும் இதன்மூலம் தேர்தல் மோசடி இடம்பெறுவது தவிர்க்கப்படும் என்றும் எனினும் வாக்காளர்கள் இரகசிய வாக்குப் பதிவு செய்வதை இது பாதிக்காது என்றும் தமிழக தேர்தல் ஆணையாளர் சந்திர சூடன் கூறியுள்ளார்-


யாழ் ஸ்ரீதரில்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்

நிதர்சனமும் இணைந்து வழங்கும்

மண்ணுக்காக...

நடிகர்கள்

தேவர் அண்ணா, கணேஸ், கலையரசன், அமரசிங்கம்

பிரியா, பூரணா

குழந்தைத் தாரகைகள்

சி. சிவரஞ்சனி, சி. சிவநிரஞ்சனா

மற்றும் பலர்

மூலக்கதை வல்வையூரான் — இசை முரளி

பாடல், படக்கதை, உரையாடல், நெறியாள்கை

பொன். கணேசமூர்த்தி

தினசரி மாலை 3.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு காலை 10.30 மணி, மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி- 9427)


## தேர்தல்தோல்வியைபொருட்படுத்தாது அரசியலைத் தூய்மைப்படுத்துவேன்

### நெருங்கிய சகாக்களிடம் விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த தேர்தலில் வெற்றி அல்லது தோல்வியைப் பற்றி பொருட்படுத்தாமல் அரசியலைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளை தான் மேற்கொள்ளப்போவதாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தமது நெருக்கமான சகாக்களிடம் கூறியுள்ளார்.

ஜனநாயக அமைப்புக்களையும், ஜனநாயகக் கோட்பாடுகளையும் பாதுகாக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா, முன்னாள் சிங்கள தலைவர்களான டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்கா, எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்காபோன்ற தலைவர்களைப்போல உறுதியாக இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன-

## எறிகணை வீச்சு கலிபர் தாக்குதல்

(தென்மராட்சி)

ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கறுக்காய்தீவு, மாசார் போன்ற பகுதிகளை நோக்கி கடும் கலிபர் தாக்குதல்களையும் அகோர எறிகணைத் தாக்குதல்களையும் தொடர்ச்சியாக ஒரு மணி நேரம் நடத்தினர்.

இதேவேளை கடந்த இரு நாட்களாக தென்மராட்சிப் பகுதியான கிளாலி, அல்லிப்பளை, கறுக்காத்தீவு போன்ற பகுதியை இரவுவேளை சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி, புக்காரா விமானங்கள் சுற்றி நோட்டமிட்டு வருகின்றன. (8.6)

## கொழும்பு மீன் வர்த்தகர் உபாலி குழுவால் கொலை

(கொழும்பு)

கொழும்பு பிரதான மீன் சந்தையில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டு இவரது சடலம் மருதானை புகையிரத நிலையத்திற்கு அருகே வீசப்பட்டிருந்தது

மீன் சந்தையிலிருந்து பட்டப்பகலில் கடத்தப்பட்ட மாத்தறை சுதா என அழைக்கப்படும் இவ்வர்த்தகர் வாளினால் வெட்டப்பட்டு குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்

இக்கொலை தொடர்பாக சந்தேகத்தின்கீழ் இருவர் கைதுசெய்யப்பட்ட போதும் இவர்கள் சொத்தி உபாலியின் ஆட்கள் என தெரியவந்துள்ளது. எனவே சொத்தி உபாலியின் சகாக்கள் தொடர்ந்தும் கொலைகளில் ஈடுபடுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## அறிமுக விழா

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தியச் சிந்தனை மரபு என்னும் நூலின் அறிமுக விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யன்று பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது கலாநிதி நா சுப்பிரமணியனும் கௌசல்யா சுப்பிரமணியனும் இணைந்து எழுதியுள்ள இந்நூலின் அறிமுகவுரையை பேராசிரியர் அ. சண்முகதாசும், நூல்பற்றிய பார்வைகளை செல்வி ரமணா தேவி நல்லதம்பி, செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்

## வீரவணக்க கூட்டம்

வலிகாமக் கோட்டம் யாழ் வட்டத்தில் 5-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு வண்ணார் பண்ணை ஐயனார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விமானம் நோட்டம்

'புக்காரா' குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் மாலை 6 40 மணியளவில் பருத்தித்துறை பகுதியை பல தடவைகள் வட்டமிட்டது. இவ்விமானம் பருத்தித்துறை, முனை, கற்கோவளம், மந்திகை ஆகிய பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டது யோ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் கழகம் நடாத்தும் கருத்தரங்கத் தொடரின் ஐந்தாவது அமர்வு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை விரிவுரை மண்ட...

## மாவுடன் மாகோ

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மாகோ' கப்பல்...

## நகர சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

கொலன்னாவ நகர சபை உறுப்பினர் ஒருவர் உட்பட ஐவர் ஹெறோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 50,000ரூபா பெறுமதியான போதைப் பொருள் மீட்கப்பட்டது.

### கூரேயின்

சிறிசேன கூரேயை கடந்த வியாழனன்று சென்று சந்தித்த கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் புதிய செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய கட்சியின் பிரசார வேலைகளில் சிறிசேன கூரே வேறுபாடுகளை மறந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். எனினும் தலைமையின் தற்போதைய போக்கு தம்மைக் காயப்படுத்தியிருப்பதாக தெரிவித்த சிறிசேன கூரே உரிய வழியில் அழைப்புக் கிடைத்தால் தாம் அதுபற்றி பரிசீலிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### ஐ. தே க.

மேலும் காமினி திசாநாயக்கா, றொனி டிமெல், காமினி ஜயவிக்கிரம பெரேரா, ரஞ்சித் அபேசூரிய ஆகியோர் பாராளுமன்றத்திற்கு வரவேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார் என கூற படுபடுகிறது

இதே வேளை ஹேமா பிரேமதாசா மற்றும் இவர்...

#### பாராளுமன்ற உறுப்பினர்

## ஊழல்களை விசாரிக்கும் நடைமுறையில் மாற்றம்

இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பெயர் கூற விரும்பாதவர்கள் சுமத்தும் ஊழல் குற்றச் சாட்டுக்கள் குறித்து பொலிசார் விசாரிக்கும் நடைமுறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் மீதுள்ள பொறுப்பைத் தவிர தனிப்பட்ட அதிகாரம் கொண்ட அமைச்சரவைக் குழு இத்தகைய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க மூத்த அமைச்சர்கள் கொண்ட குழுவொன்றிடம் இதற்கான திட்டத்தை தயாரிக்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பணிப்புரை விடுத்துள்ளார்

## பொஸ்னிய முஸ்லிம்களுக்கு ஈரான் ஆயுத விநியோகம்

(வாஷிங்டன்)

ஐ. நாவின் ஆயுதக்கட்டுப்பாட்டையும் மீறி ஈரானிய கப்பல் ஒன்று பொஸ்னிய முஸ்லிம்களுக்கு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் எடுத்துச் சென்றுள்ளது. இது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்க அமெரிக்கா மறுத்து விட்டது. எனினும் இந்த தகவல் புலனாய்வாளர்கள் மூலம் எட்டியுள்ளதாகவும் இதை ஏற்கவோ மறுக்கவோ முடியாது என அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1992 இல் பொஸ்னியாவுக்கு ஈரானிய விமானம் ஒன்று ஆயுதங்களை ஏற்றி வந்த போது இது குறித்து அப்போது அமெரிக்கா குரோஷியாவை எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது 60 தொன் ஆயுத தளபாடங்கள் ஈரானால் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மல்லாகம் முகாமில் தையல் பயிற்சிக்கு ஏற்பாடு

வலி. வடக்குப் பிரதேசமான தெல்லிப்பளை அரச அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியேயும் வாழ்ந்துவரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 30 பெண் பயிற்சியாளர்களை தெரிவு செய்து, இவர்களுக்கான இலவச தையல் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மல்லாகம் நீதிமன்ற இடம் பெயர்ந்தோர் முகாமில் கடந்த 16ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சுன்னாகம் பிரிவு இணைப்பாளர் திரு. சுப்பிரமணியம் தலைமையில், புனர்வாழ்வுப் பொறுப்பாளர் திரு ரவி அவர்களும் மல்லாகம் சிற்றூர் பொறுப்பாளர் திரு நளின் அவர்களும் மங்கள விளக்குகளை ஏற்றிவைக்க தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து சிறப்புரைகளையும் வழங்கினார். அதைத் தொடர்ந்து புனர்வாழ்வுப் பிரிவு பொறுப்பாளர் திரு ரவி அவர்களால் ஒன்பது மாதங்களுக்கான பயிற்சி நெறிக்கான பாடத் திட்டம் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு, பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் வி. கழகம் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றையஆட்டங்கள்3 30மணிக்கு 2 ம் பிரிவு ஆட்டத்தில் கொய்யாத் தோட்டம் ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து இளவாலை யங் கென்றீஸ் வி. கழகமும் 4 30 மணிக்கு 1 ம் பிரிவு ஆட்டத்தில் காங்கேசன்துறை யங் றோயல் வி கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் வி. கழகமும் விளையாடவுள்ளன-

### தேசியப்பட்டியல்

செயலாளர் காமினி விஜேசேகரா, ஜாரம்பதி ஆகியோரும் உடன் இருந்தனர்-

ஜனாப் அமீட் ஐ.தே.கவின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரும், முஸ்லிம் லீக்கின் இணைப்பு செயலா...


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் :

11 - 07 - 1927

மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி- 9427)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் :

11 - 07 - 1927

மறைவு :

18 - 04 - 1994

திதி 18 - 5 - 1994

உடுவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை
உறைவிடமாகவும் கொண்ட

## அமரர்
## திரு. நாகலிங்கம் சிவபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஓவசியர், T. O. பட்டினசபை சுன்னாகம்)

அன்புமிகு இல்லத்தலைவராய்
பாசமிகு தந்தையாய்
பாங்காய் பேசிடும் பண்பாளராய்
ஓடோடிச் சென்று
உதவிடும் உள்ளத்தினராய்
உழைப்பால் உயர்ந்து - பலருக்கு
உயர வழி சொல்லிக் கொடுத்தவராய்
நாம் நேசிக்கும்
எமது அன்புத் தந்தையே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: சி. செல்வராணி

பிள்ளைகள்: சியாமளா, சிவகுமார்
சர்மிளா, சசிகுமார்.

18 - 4 - 94 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டு உதவிகள் பல புரிந்தோர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இன்று (18-5-94) அன்னாரின் இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (8311) குடும்பத்தினர்

## வீரவணக்க கூட்டம்

வலிகாமக் கோட்டம் யாழ் வட்டத்தில் 5-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு வண்ணார் பண்ணை ஐயனார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் சழகம் நடாத்தும் கருத்தரங்கத் தொடரின் ஐந்தாவது அமர்வு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இன்றைய அமர்வில் 'வான சாஸ்திரமும் சோதிடக் கலையும்' என்னும் பொருளில் யாழ் மாவட்ட தொலைத் தொடர்பு திணைக்கள முன்னாள்பரிசோதகர் சோ. சிவகடாட்சசர்மா உரையாற்றவுள்ளார்,

வைகளை செல்வி ரமணா தேவி நல்லதம்பி, செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்

## விமானம் நோட்டம்

'புக்காரா' குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன் தினம் மாலை 6 40 மணியளவில் பருத்தித்துறை பகுதியை பல தடவைகள் வட்டமிட்டது. இவ்விமானம் பருத்தித்துறை, முனை, கற்கோவளம், மந்திகை ஆகிய பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டது யோ)

## மாவுடன் மாகோ

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'மாகோ' கப்பல் நேற்று காலை 7.00 மணியளவில் மூவாயிரம் மெட்றிக் தொன் மாவுடன் வந்து சேர்ந்தது. மா இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது இத்துறைமுகத்தில் தரித்து நின்ற 'றுகுணு' கப்பல் நேற்று புறப்பட்டுச் சென்றது
(யோ)

துழைக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். எனினும் தலைமையின் தற்போதைய போக்கு தம்மைக் காயப்படுத்தியிருப்பதாக தெரிவித்த சிறிசேன கூரே உரிய வழியில் அழைப்புக் கிடைத்தால் தாம் அதுபற்றி பரிசீலிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ. தே. க.

மேலும் காமினி திசாநாயக்கா, றொனி டிமெல், காமினி ஜயவிக்கிரம பெரேரா, ரஞ்சித் அபேசூரிய ஆகியோர் பாராளுமன்றத்திற்கு வரவேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார் என கூற படுபடுகிறது

இதே வேளை ஹேமா பிரேமதாசா மற்றும் இவர் மகன் சஜீத் பிரேமதாசா தொடர்பாக இக் கூட்டத்தில் கருத்து ஒன்றையும் ஜனாதிபதி தெரிவிக்கவில்லை என்றும் இதனைத் தொடர்ந்து பிரேமதாசா ஆதரவாளருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே சில சூடான வார்த்தைகள் பரிமாற்றப்பட்டன என்றும் மேலும் தெரியவருகின்றது

யின் இணுவில் மைதானத்தில் நடாத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் 3 30 மணிக்கு 2 ம் பிரிவு ஆட்டத்தில் கொய்யாத் தோட்டம் ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து இளவாலை யங் கென்றீஸ் வி. கழகமும் 4 30 மணிக்கு 1 ம் பிரிவு ஆட்டத்தில் காங்கேசன்துறை யங் றோயல் வி கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் வி. கழகமும் விளையாடவுள்ளன-

## தேசியப்பட்டியல்

செயலாளர் காமினி விஜேசேகரா, ஜயரம்பதி ஆகியோரும் உடன் இருந்தனர்-

ஜனாப் அமீட் ஐ. தே. கவின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரும், முஸ்லிம் லீக்கின் இணைப்பு செயலாளர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது-

இதேவேளை முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க நாளை பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பார் என தெரியவருகிறது

## ஆக்கிவாயு

வரையும் தாவடிச் சந்தியிலுள்ள சக்திப் பகுதி அலுவலகத்தில் வைத்து இயக்கிக் காண்பிக்கப்படும்-

இச் செயற்பாட்டைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளனர்-

கடந்த 16ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சுன்னாகம் பிரிவு இணைப்பாளர் திரு. சுப்பிரமணியம் தலைமையில், புனர்வாழ்வுப் பொறுப்பாளர் திரு ரவி அவர்களும் மல்லாகம் சிற்றூர் பொறுப்பாளர் திரு நளின் அவர்களும் மங்கள விளக்குகளை ஏற்றிவைக்க தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து சிறப்புரைகளையும் வழங்கினார். அதைத் தொடர்ந்து புனர்வாழ்வுப் பிரிவு பொறுப்பாளர் திரு ரவி அவர்களால் ஒன்பது மாதங்களுக்கான பயிற்சி நெறிக்கான பாடத் திட்டம் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு, பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது

## தமிழ் விழா

(குருநகர்)

யாழ் திருமறைக்கலா மன்றம் எடுக்கும் தமிழ் விழா இம் மாதம் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் தினமும் மாலை 6மணிக்கு பிரதான வீதி மன்றக் கலை அரங்கில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது

சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, கருத்தரங்குகள், நடனங்கள், நாடகங்கள் ஆகியன தமிழ் விழாவில் இடம்பெறுகின்றன.

''ஔவையார், ''கும்பகர்ணன்'' ஆகிய இலக்கிய நாடகங்களும் சிறப்பம்சமாக விழாவில் மேடையேறும். (21)

# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

| | |
|---|---|
| கல்வித் தகைமைகள்: | 8-ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை |
| உயரம்: | 5' 6" |
| வயது: | 18 தொடக்கம் 30 வரை |

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 25 - 5 - 94-ம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத்தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

நடுவப்பணியகம்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

(சி-9450)

## மரண அறிவித்தல்

## திருமதி மரியபிள்ளை சூசைப்பிள்ளை

(கலீனாம்மா)

திருமதி மரியபிள்ளை சூசைப்பிள்ளை [கலீனாம்மா] நாரந்தனை ஊர்காவற்றுறையில் காலமானார். இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், யேசுதாசன் (ஜேர்மனி), பிரான்சிஸ் சேவியர் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அருமைத்தாயாரும், தவம்(ஜேர்மனி), றோஸ் மனோரஞ்சினி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகள் (ஜேர்மனி), பேரப்பிள்ளைகள் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

இனிய நினைவுகள் என்றென்றும் நினைவில் நிலைத்திருக்கும், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 18- 5- 1994 இன்று புதன்கிழமை காலை 6 30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலியில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்

தகவல்:
திரு. திருமதி D. S. பிறைசூடி.
'நிரஞ்சனி'
பண்டத்தரிப்பு
(சம்பந்தி)

(8307)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 81ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப் பட்டது.